ஓம்

வட்டுக்கோட்டை நடராஜ ஜோதிஷர் வெளியீடு. க.

சித்தர் ஆரூட விஷ வைத்தியம்.

A MANUAL OF SNAKE-BITE-CURE

பதிப்பாசிரியர்.

Pt. நடராஜன்

ஜோதிஷர்.

பாயிரம்

நிலைமண்டில ஆசிரியப்பா

அமிழ்தினு மினிய தமிழ்மொழி யதனில்
அருமையுங் குன்றாப் பெருமையும் நிறைந்த
நூல்பல வற்றுட் சால்புறு வைத்திய
நூல்கள் பற்பல ஏலவச் சேருக்
குறையது கண்டு நிறைவுளங் கொண்டு
சிந்தைநைந் தாற்ற வந்தனன் யாரெனில்
செந்தமிழ் நாடாம் இந்திய நாட்டினின்
நீழும் போந்த எல்லையி லறிஞன்
மல்லலந் தோளார் ஒல்லாந்தர் காலத்
தயர்துவி பாஷகர் உத்யோகம் வகித்த
அந்தணர் கணேச ஐயர் அவர்கள்
மைந்தனின் மைந்தன் ஷண்முக மறையோன்
தந்திடு குரிசில் தமிழாய்ந் திடுவோன்
நடராஜப்பெயர் நற்குணச் செம்மல்
உத்தம நூலாஞ் சித்தரா ரூட
வைத்திய நூலை மகிதலந் தன்னில்
அச்சேற் றினனால் அருட்புக ழோனே.

பதிப்புரை.

சித்தாரூடம் என்பது ஒரு விஷவைத்தியநூல். இதன்கண் மிக அரிய வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன. இம்முறைகள் அநுபவத்திற் பெரிதும் சிறந்திபயப்பனவாகும். இதிலுள்ள சிந்து வடிவான செய்யுள்கள் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்னும் அழகு நலமும்பெற்று விளங்குதலோடு எவர்க்கும் எளிதில் விளங்கக் கூடியவையுமாகும். இந்நூல் பாம்புகளைப்பற்றி மிக விசித்திரமான வரலாறுகளையெல்லாம் கூறுகின்றது. பாம்புகளின் வேறுபாடுகள், அவற்றின் ஜாதிகள், குணங்கள், பாம்பு தீண்டிய விஷத்திற்குரிய பரிகாரமுறைகள், நசியம், தைலம், முதலிய மருந்துவகைகள், தூதன் குறிகள், தீண்டியபல்லின் தொகைகளை அறியும் வழிகள் முதலியவற்றை மிகவிரிவாகவுந் தெளிவாகவும் எடுத்துக்கூறுகின்றது. பாம்பின் விஷத்திற்கேயன்றி வேறுவிஷஜந்துக்கள் தீண்டிய விஷத்தைப் போக்கவல்ல முறைகளும் இதிற் காணப்படுகின்றன. அங்ஙனம் மருந்தால் மாற்ற முடியாத சிலவிஷங்களைப் போக்குதற்குக் கரு

டத்தியானம் முதலிய தெய்வவழிபாட்டு முறைகளையும் இந்நூல் குறிக்கின்றது. இவ்வாறு சிறந்த பரிகாரமுறைகள் இதிற் கூறப்படுதலால், இந்நூல் வைத்தியர்களாற் பொன்னேபோற் போற்றப்படத்தக்கதொன்றாம்.

தமிழில்விஷவைத்தியத்தைப்பற்றிக்கூறும் நூல்கள் கருடஆரூடம் கருடபஞ்சாட்சர ஆரூடம் சிவாரூடம் சத்தியாரூடம் நாகாரூடம் சித்தராரூடம் சர்ப்பாரூடம் மந்திராரூடம் தேவியாரூடம் என ஒன்பதுளவென்று பெரியோர் கூறுவர். இவற்றுள் சித்தர் ஆரூடமே மிகச்சிறந்த முறைகளைக் கூறும் புராதன நூலாகும். இவைகளின் காலத்தைப்பற்றி ஒன்றும் துணிந்துகூறமுடியாது. ஆனால் மஹாமஹோபாத்தியாய டக்டர். சுவாமிநாதையர் அவர்கள் 1927ம் வருஷ மார்கழி மீ 10ம் உ சென்னை சர்வகலாசாலைச் சங்க ஆதரவில் "கலைகள்" என்னும் விஷயமாக நிகழ்த்திய உபந்நியாசத்தில் சித்தர் ஆரூடம் என்றநூல் ஒன்று உண்டு. பாம்புகளின் வேறுபாடுகள், சாதிகள், குணங்கள், அவற்றின் விஷங்களுக்குப் பரிகாரம் முதலியன சொல்லப்பட்டிருக்கும். அந்நூல் நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. சிந்துவடிவமாக உள்

ளன அதன் செய்யுட்கள்" என்று கூறியுள்ளார்கள். இதனை நோக்குமிடத்து சித்தர் ஆரூடம் என்னும் தமிழ்நூல் நச்சினார்க்கினியர் காலத்தில் தமிழ்நாட்டில் நிலவியிருந்தமை அறியக்கிடக்கின்றது. அல்லாமலும் சீவகசிந்தாமணி ஆசிரியரான திருத்தக்கதேவர் காலத்திலும் விஷவைத்திய நூற்பயிற்சி நன்கு இருந்திருக்கவேண்டும் என்பதற்குச் சீவகசிந்தாமணியில் பதுமையார் இலம்பகத்தில் 122-ம் செய்யுள் சான்று பகரும்.

சித்தர் ஆரூடம் என்னும பெயர் தாங்கிய நூல் ஒன்று விருத்தப்பாவில் (அறுபத்தாறு செய்யுட்களைக் கொண்டதாய்) ஆக்கப்பட்டிருந்ததாக ஜீவரக்ஷாமிர்தம் தமிழ் மொழிபெயர்ப்பில் பதினாலாவது விஷாதிபேதப்படலத்தில் சர்ப்பகுசிகா லட்சணத்தில் "இவ்விஷங்கள் மணிமந்திர ஔஷதாதிகளுக்கு அஞ்சும" என்று சித்தர் ஆரூடவிருத்தப்பா என்னும் சாஸ்திரம் கூறுகின்றது" என அதன் ஆசிரியர் கூறும் முகத்தால் அறியக்கிடக்கின்றது. ஆனல் அது இதுகாறும் வெளிவந்திலது. சிந்துவடிவிலுள்ள சித்தர் ஆரூடமே வெளிவந்துளது. இவற்றில் நச்சினார்க்கினியர் எதனைத் தமது மேற்கோளில் எடுத்தாண்டார்,

என்று துணிந்து கூறஇயலாது. அங்ஙனமாயி னும் இது தமிழ்நாட்டில் வழங்கிவந்த ஒரு பிராசீன நூல் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

தமிழில் விஷவைத்திய நூல்கள் பெரிதும் அருகிக் கிடக்கும் இந்நாளில் ஒரு திருந்திய பதிப்புப் பலருக்கும் பயன்படும் என்று கருதியே யாம் இந்நூலை வெளியிடத் துணிந் தோம். இதற்குமுன் பதிப்பித்த நூல்கள் பிழை கள் மலிந்தும், இடையிடையே பல அடிகள் விடப்பட்டும் கிடந்தமையே எம்மை இம் முயற்சி யில் தூண்டியது. அன்றியும் "தமிழில் திருந் திய வைத்திய நூல்கள் மிகுதியாக இல்லை" என்று பலரும் கூறும் குறையை நீக்குவான் கருதியும் ஏட்டுச் சுவடிகளில் மறைந்து கிடக் கும் பல வைத்திய நூல்களை அச்சிட்டு லோ கோபகாரமாய் வெளிப்படுத்தித் தமிழ் மொ ழிக்கு ஆக்கம் தேடவேண்டும் என்னும் நோக் கமும் எம்மை இப்பணியில் ஈடுபடுத்தின.

சிறப்பாகத் தமிழ் மக்களுக்குப் பயன் படும்படி வைத்திய நூல்கள் பல வெளிவர வேண்டுமெனக் கூறும் அபிமானிகள் "இதனை முற்ற நோக்கி, இயைபுடையதாயிற் கொள்ளக்

கடவர். இயைபிலதாயின் தள்ளக்கடவர். தாம் இதன்பாற் கண்ட குறைகளையும் எடுத்துச் சொல்லக்கடவர். அஃது அரும்பயன் ஆயும் அறிவிேனோர்க்குப் பெரும் பயன் விளைவிக்கும். எமக்கும் திருத்தம் சித்திக்கும்."

வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
யுவ. பங்குனி.

Pt. நடராஜன்.

எம்மால் எழுதப்பெற்று, விரைவில்
வெளியிடப்படவிருக்கும்

நூல்கள்

வைத்தியப்பகுதி

(புராதன நூல்கள்)

செகராசசேகரம் (சர்ப்பசாஸ்திரம்)

அமுதாகரம் (சர்ப்பசாஸ்திரம்)

சித்தாரூட விருத்தப்பா

(விஷவைத்தியம்)

சோதிடப் பகுதி

(புதிய நூல்கள்)

சோதிட கணித, சூக்ஷ்மபல தர்சினி.

(அரிய ஆராய்வோடு கூடிய சிறந்த நூல்)

ஸங்கீதப் பகுதி

சங்கீத சரஸ்வதி

PT. NATARAJAN.

ௐ

சித்தர் ஆரூட

விஷ வைத்தியம்.

விருத்தம்.

அத்திமாமுகவன்செய்ய வடியிணைக்கமலம் போற்றிச்
சித்தரா நடந்தன்னிற் செப்பிய பொருளா ராய்ந்து
சுத்தமாய் எவர்க்குந் தோன்றச் சுருக்கமாய் நொடிச் சிந்தாங் [டிச் சிந்தாங்
வித்தக னருளினாலே தமிழினில் விளம்ப லுற்றேன்.

சிந்து.

திருமருதூர் வளரும் நாகலிங்கர்
சீர்பாத கமலமென் சிரத்தில்வைத்து
மருவுஞ் சித்த ராரூடப் பொருளினை
வகுத்துச்சொல் வேனிந்த மகிதலத்தில் 1

நூற்சுருக்கம்.

புண்டரிகத்திலுறைவோன் படைப்பினில்
பொல்லாத விஷஜந்து வெல்லாம் நனி
விண்டுரைக்க நீ கேளாய் நல்ல பாம்பு
விரியன் *வழலை கொம்பேறு†மூக்கன் 2

சாணாக மூக்கன் புடையன் மண்டலி
சவுடி மயக்கரா மண்ணுளி சாரை
வாணாளை வாட்டுஞ் செய்யான் இருதலை
மணியன் சிலந்தி புலிமுகப்பூச்சி 3

தேட்புள்ளி வண்டு பூரான் பச்சோந்தி
செவ்வட்டை பேய்நரிநாய் செருச்செயெலி
வாட்பல்லுப்பூனை புலி §பிலவங்கம்
வனத்திற் றவளையட்டை வாசிமுதலை 4

அரணை நண்டுத்தெறுக்கால் முதலிவை
யல்லாத ஜந்துவு மனேக முண்டு
உரகத்தின் பேரும் நிறமும் ஜாதியும்
ஊணும் மணமும் அவை யுறையிடமும் 5

படமெடுத்தாடுங் குறியும் முட்டையிட்டுப்
பருவமறிந்து பொரித்தலும் பரிசும்

---

*வழலை--கருவழலை-இராஜமாநாகம்
†மூர்க்கன்=நாகபாம்பு. §பிலவங்கம்— குரங்கு

விடமுறு தந்தக்குறியுங் கடித்திடும்
விதமும் கடித்தகடி மீளாவிடமும் 6

காலக்கடி யடக்கக்குறி வேகக்குறி
கழறிய தூதரிற் காணுங்குறியும்
சீலமுள்ள மணிமந்திரத்தால் கருடத்
தியானத்தால்மருந்தினாற் றீர்க்குஞ்செயலும் 7

குருமல ரடிவணங்கி வகையாகக்
கூறுகிறே னிந்தக் குவலயத்தில்

பாம்புகளின் உற்பத்தி சரிதை

மரைமலர்ப் பொகுட்டுறைவோன் பயந்தருள்
மகவென வந்துதித்த மாதவத்தினோன் 8

காசிபன் மனைவியரில் மிக்கான
கத்துரு வயிற்றுதித்த கட்செவிகளில்

அஷ்டமா நாகங்களின் பெயர்

பேசிடு பெயரனந்தன் வாசுகி
பெலத்ததக்ஷகன் கார்க்கோடன் பத்மன் 9

மாபத்மன் சங்கபாலன் குளிகன்
மாநாக மிவையெட்டுந் தானுமிவற்றுள்

பாம்புகளின் ஜாதி வகுப்பு

தீபக்கண் அனந்தனுடன் குளிகனும்
ஜகத்தில்வே தியரென வகுத்தனரே 10

வாசுகி சங்கபாலன் இருவரும்
மன்னவ ராமென்றூர் முன்னவர்கள்
தேசுறு தக்ஷகன்மா பத்மனிவர்
தெளிந்த வணிகரென விளம்பினரே 11

சூத்திரர் கார்க்கோடகன் பத்மனென்று
சொன்னூர்க ளிவற்றின்மூற் சொன்ன பாம்பு
மூத்திடு மாளுகும் பின்னும்
மொழிந்தவிட வரவங்குறைந்தபெண்ணும 12

பாம்புகள் இரையெடுக்கு நாள்.

ஆதித்த வார மனந்தன் வாசுகி
அடுத்ததிங்கட் கிழமைக் கிரையெடுக்கும்
போதுற்ற செவ்வாய் தக்ஷகன் கார்க்கோடன்
புதன்கிழமை யிலிரை புவந்தெடுக்கும் 13

விடங்கொண்ட தூலெயிற்றுப் பத்மன்
வியாழக் கிழமைதனி லிரையெடுக்கும்
படர்ந்துசென் றிரை தேடு-மாபத்மன்-
*பார்க்கவன் வாரத்தில் பரிந்தெடுக்கும் 14

---

*பார்க்கவன் வாரம்—வெள்ளிக்கிழமை

கூறுஞ் சனிக்கிழமை பகல்- சங்கபாலன்
குளிகனிரவி விரை கூறித்தெடுக்கும்

பாம்புகளின் உணவுபேதம்

பூருவ மறிந்த பார்ப்பார் வாய்வும்
பூமணா மிரண்டையும் புசித்திருப்பார் 15

அரச ராறுகங்கிழங்கும் வண்டுமெடுத்
தருந்தி மரந்தனிற் சென்றிருந்திடுவார்
இரை தேடிச்சென்று வணிகர் § ஓந்தியும்
எலியு மருந்திப் பசி நலிவகல்வார் 16

சூத்திரர் மீன் றவளை தண்ணீர்த்
துறைதனிற் சென் றருந்து முறையிதுவே

பாம்புகள் வசிக்கும் இடம்

சாஸ்திரஞ் சொன்ன படியே நால்வகைச்
சாதி யிருக்கு மிடந்தன்னைக் கேளாய் 17

வேதியர் கோவிலிலே மரமன்னர்
வீட்டில் வணிகர் புற்றில்காட்டு சூத்திரர்
நீதியாய் வாழ்ந்திருப்பார் நால்வரும்
நின்றுடுங் குறிதனை நிகழ்த்துகிறேன் 18

---

§ ஓந்தி—ஓணான்

பாம்புகள் படமெடுத்தாடும் விதம்

அண்ணாந்து பார்த்தாடுவார் வேதியர்
அரசர்களெதிர் பார்த்தாடி நிற்பார்
கண்ணா லெண்டிசைதனையே வணிகர்கள்
கண்டாடுவார் யாருங் கொண்டாடவே 19

மல்லாரும் பூமிதனையே சூத்திரர்
மகிழ்வுடனே பார்த்தாடி நிற்பார்
பொல்லா வரவின் படத்தில் இருக்கின்ற
பொறியினைச்சொல்லுகிறேன்நெறியுடனே 20

பாம்புகளின் படத்தினடையாளங்கள்

பார்ப்பார் படத்திற் சங்கு மன்னர்
படத்தினிற் சக்கரம் பதிந்திருக்கும்
காப்பான வில்லுவணிகர் படத்தினில்
கனத்த சூத்திரர்கட்குப் புள்ளடியென்றார் 21

பாம்புகளின் நிறபேதம்

பூசுர ரத்த நிறமாம் புரவலர்
பொன்னிறமாம் வணிகர் வெண்ணிறமாம்
மாசிலாச் சூத்திரர் நிறந் திருஷ்டியின்
மைந்நிறமா மிது மெய்யாகுமே 22

பாம்புகளின் §கந்த பேதம்

அந்தணர் நாவிமணம் இறையவர்
அலர்ந்த செந்தாமரையி னலர் மணமாம்
வந்திடும் வைசியர் மணம் பாதிரிப்பூ
வகுத்த சூத்திரர் மண மிலுப்பையின்பூ 23

பாம்புகள் கர்ப்பந்தரிக்கும் வகை

ஜாதி யிந்த நாலுவகையில் ஆணும் பெண்ணும்
தழுவிப் புணர்ந்து கர்ப்பந் தரித்த பின்னர்
நீதியாய் முட்டையிட்டுப் பொரித்திடும்
நேர்மையைச் சொல்லுகிறேன் நீ கேளாய் 24

பாம்புகள் முட்டை பொரிக்கும் வகை

காற்றாது மாடிமாதம் ஒன்றோடொன்று
கலந்து வயிற்றினிலே கருத் தரிக்கும்
தோற்றிய கார்த்திகையில் கரு முற்றிச்
சூலுளாந் தீனுமென்பரேல் எழுநாள் 25

பிரமனும் ஆதியிலே உளங்கருதிப்
பிரபஞ்ச முற்பத்தி செய்ததைப்போல்
இருநூற்று நாற்பத்தெட்டு முட்டைகளிட்
டிருநூற்றுப் பத்தெட்டோ ரேழுநாளில் 26

---

§கந்தம்—வாசனை

பருகிடும் நாலுமுட்டை அழிந்துபோம்
பதினாறு முட்டை நல்ல பக்குவத்திலே
ஒருமிக்க விருபத்தேழாம் நாளினில்
உச்சிதமாகப் பொரித்தூர்ந்து திரியும் 27

நாலாறு காலுமுண்டாம் தோன்றிய

பாம்புகள் நஞ்சு பெறும்வகை

நாலேழு நாளில் நஞ்சுவேண்டி
மேலேறு மாதித்தனைப் பார்த்தாடும்
விளங்குமேல் வாய்ப்பல்லு நாலினுமே 28

கொடிவிஷம் வந்து குதிக்கும் பற்சுரக்கும்
ஊறுபல்லூறிடு மாறுமலே

பாம்புகளின் நச்சுப்பற்களின் பெயர்

கருவமரும் நாலெயிற்றுக்கும் பெயர்சொல்வேன்
காளி காளாஸ்திரி யமன் யமதூதனும் 29

மேல்வாயலகுதனில் அரவுக்கு
விளக்கமாய் நாலுபல்லு முளைத்திருக்கும்

பாம்புக் கடியினால் நஞ்சிறங்கும்வகை

நாலுபற்குந் துளையிருக்கும் கடித்திடில்
நச்சுப்பற் துளைவழியாய் நஞ்சு கழன்று 30

வந்து கடிவாயிலிறங்கி தொண்ணூற்றெட்டு
மாத்திரையினின்றுடலில் மண்டியேறும்
அந்தமுள்ள படத்துரகந் தோன்றியாள
ளறுபதில் தோலுரிக்கு மறுமதியில் 31

குதித்திடும் விஷமெயிற்றில் ஈதிரண்டுங்
கொண்ட வாளரவிற்குக் கண்டமென்பார்
கதித்திடு மெயிற்றரவப் பல்லுறைக்குங்
கடிவாயின் குறிதனைக் கழறுகிறேன் 32

பாம்புக் கடிவாய்க்குறி

காளியெனும் பல்லுத்தைத்தவாய் புள்ளடியாம்
கடிவாயிற் பன்னீர்போல் வடிவாம் நீர்
மீளாத காளாஸ்திரீ தைத்தவாய்
விளங்கு முக்கோணம் செந்நீர் கசியும் 33

கோதாய நமனென்னும் பல் தைத்தவாய்
கூர்முட் கீறனிகரும் செந்நீர் பொசியும்
ஆதனென்ற பல்லுத்தைத்தால் விற்போலாம்
சுவடு கழுநீர்போல வடிவாகும் 34

பாம்பு கடிப்பதற்குக் காரணம்

பசியுற்றால் பயந்தால் நொந்தால் கோபித்தால்
பல்லின் விஷமிருந்தால் மெல்லமிதித்தால்

இசையுறு தேவர் முனிவர் காலனிவர்
ஏவலினால் வினைதாவலினால் 35

செய்தநன்றி கொன்றபேரைப் பூர்வ
ஜன்மப்பகையாளரை வன்மமுள்ளோரைப்
பையரவம் வந்து கடிக்கும் கடித்தொரு

பாம்பின் பற்பட்டால் விஷமேறும் வகை

பற்பட்டால் விஷந்தோலைப் பற்றியேறும் 36

பல்லிரண்டு பட்டால் விஷம் மாமிசத்தைப்
பற்றியேறும் மூன்று பற்பட்டால் விஷம்
வல்லெலும்பைப் பற்றியேறும் நாலுபல்
வகிர்ந்திடில் மூளை புகுந்தேறும் விஷம் 37

காற்கடி யொருபற்பட்டால் இருபல்லால்
கடித்திடில் அரைக்கடியாகும்
மூர்ச்சமிகு மூன்றுபற்பட்டால் அந்தக்கடி
முக்காற்கடி யென்றனர் மிக்கபெரியோர் 38

மூளைத்தபல் நான்கும்பட்டால் அந்தக்கடி
முழுக்கடியாமென்று வகுத்தனரே

பாம்புக்கடி விஷந்தீர்க்கும் முறை

தாளைப்பல்லிலொரு பற்பட்டால் அந்தக்கடி
தொடங்கித் தியானிக்க விடந்தீரும் 39

இரண்டு பற்பட்டவிஷத்தை மணிமந்திரத்
தேற்குங் கருத்தினால் தீர்க்கலாமே
மூரண்மிகு மூன்றுபற்றைத்தால் அந்தக்கடி
மூலி கலிக்க நசியத்தால் தீரும் 40

அரவின்பல் நாலும்பட்டால் மணி மந்திரம்
ஔஷதந் தெய்வச்செயலால் தீரும்
விரைவினிலரவம் வந்து கடித்திட்டால்
மீளாத குறியிடம் விளம்புகின்றேன் 41

பாம்புவிஷக்கடி மரணம் விளைக்கும் உறுப்புக்கள்

உள்ளங்கால் உள்ளங்கை நெற்றி மார்பு கழுத்
துதடு முலை மூக்குப் புருவந் தொப்பூழ்
தெள்ளிய நற்சந்து குறிக்கால் இருசெவி

பாம்புக்கடிவிஷம் மரணம்விளைக்கும் இடவகை

தோடி ஆலமரத்தூரடியில் 42

புன்னை புளி மூங்கி லரசில் நாணலில்
புற்றிற் கிணற்றி லேரிப் புதுமடையில்
இன்னமுள்ள பாழ்ங்கோவிலில் பாழ்வீட்டில்
விறகினிடத்திற் பிணஞ்சுடுமிடத்திற் 43

நந்தவனம் பொதுமடத்தில் ஏரிக்கரை
நதிக்கரை சுனைக்கரை யாகசாலையில்

அந்தி சந்தி முச்சந்தியில் உறக்கத்தில்
ஐயன்பிடாரி அர்க்கை ஆலயத்திலும் 44

பாம்புக்கடிவிஷம் மரணம்விளைக்கும் நக்ஷத்திரம்

மாயவரிப்பாம்பு கடித்தால் தீராது
மரணநாளுஞ் சொல்லிற் பரணி மகம்
ஆயில்யம் திருவோணம் மூலந் திரு
வாதிரைகார்த்திகைமுறஞ்சோதிசித்திரை 45

ஜன்மநாள் ஜன்மமுன்னாள் அநுஜன்மம்
சேர்ந்திடு நாளுமமாவாசை
வன்மைமிகு நவமி சஷ்டி குளிகனில்
வந்து கடிக்கிலது முந்திக்கொல்லும் 46

பாம்பின் விஷம் மரணம்விளைப்பதாயின் அதின் செயல்வகை

தானேடிக் கடித்தரவம் ஆடினும்
தாழ்ப் புரளினுங் கடித்தந்தவிடத்தே
தானுடிக்கிடந்திடினும் அந்தக்கடி
தப்பாமற் கொல்லுமென்று செப்பலாமே 47

மரணக்கடி பெற்றவனின் அடையாளம்

கடித்தவாய் தடிக்கிற் கொல்லும் வீங்கிக்கடுத்
தேறினுங் கொல்லுங் கண்டஞ்சேரினுங்
[கொல்லும்]

குடித்த மருந்தெடுக்கிற் கொல்லும் கடிவாயிற்
குழறியே செங்குருதி பாயினுங்கொல்லும் 48

விடங்குதித்தொழுகிற் கொல்லும் நாவரண்டு
விழிசிவந்தால் நடுக்கமேவினுங் கொல்லும்
படங்கொண்டபொறி யரவின் நாலுபல்லும்
பதியப்படினுங் கொல்லும் பற்கடித்தவை 49

கறுத்திடிற்கொல்லு முரகம் சீறிவே
கடித்தவுடன் மலநீர் விடுத்தாற் கொல்லும்
விறைத்துடல் கைகால்விரல் நிமிர்ந்திருவிழி
செருகினுங்கொல்லுமேற்செயல்சொல்வேன் 50

வெவ்வேறுபாம்புகளின்கடிகளால்விளையும் பலன்கள்

நச்சரவி லாண்கடித்தால் மேல்நோக்கும்
நயனம்பெண்பாம்பெனிற கீழ்நோக்கும்
அச்சமில்லா பலடாகில் வேர்வைமிகும்
அலிப்பாம்பெனில் விஷங்கவிய்யாமே 51

சூலாகில் வயிறுளையும் முட்டையிட்ட
தட்டையெனில்நெட்டைவிழி முற்றச்சிவப்பாம்
வெளெயிற்றுக் காளைகடித்தால் வலதுகண்
வேதனைசெயயுங் கிழச்சாதிகடித்தால் 52

கடித்தவாய் வீக்கங்காணும் இளமைசேர்
அன்னியரவுக் கிடதுகண் துயர்செய்யும்
துடித்திடுங்குட்டிப்பாம்பு கடித்திடில்
சோர்வும்மயக்கமுடன்பாரில் வீழ்த்தும் 53

கருநாகந்தீண்டியதன் குணம்

கருநாகங்கடித்ததென்றால் உடனிரு
காதுஞ்செவிடாகு மென்றேநினரே
ஒரு நாகத்தலைவிதுவே பலவிஷத்
துரகங்கள் சரித்திர முரைசெய்கிறேன் 54

விரியன் பாம்புகளின் ஆறுபிரிவுகள்

விரியனிலாறு பேதம் கத்தரி
விரியன் பெருவிரியன் ரத்த விரியன்
பரிவுசெய் குறுவிரியன் புல்விரியன்
பன்னுஞ் சலவிரியன் என்னுமிவற்றுள் 55

விரியன் பாம்பினின்றும் உற்பத்தியாகும்
விஷப்பிராணிகள்

முரட்டுக் கத்தரி விரியன் சூல்கொண்டு
முதுகு வெடித்துக் குஞ்சது பொரித்தால்
காட்டோந்தி தேள்பூரம் நண்டுத்தெறுக்
காலுடன் சிலந்தி புலிமுகப்பூச்சி 56

செய்யா னறுபொறிவண்டு [illegible]லை
சீவ செந்துக்களிற் [illegible]

பெருவிரியன் தீண்டியதன் குணம்

மெய்யான பெருவிரியன் [illegible]டித்திடில்
வீங்கிக் கடுத்தெரிந்து வீழுங்குருதி 57

வடிந்திடுங் கடிவாயில் கண்ணுறங்கி
பயங்கியுடல் வெதும்பித் தியங்கிடுமே

ரத்தவிரியன் தீண்டியதன் குணம்

கடித்திடும் ரத்தவிரியன் பற்படக்
கடித்திடில் வாயின்வழி காணுங்குருதி 58

காற்றடிக்கி லுடல்வீங்கிக் கடுத்திடக்
கலந்து வயிற்றுவலி பிறந்து கொல்லும்

ஏனை விரியன்கள் தீண்டியதன் குணம்

மாற்றமிகு மூவிரியன் கடித்திடில்
வலித்துக் கடுத்தெரிந்து வீங்குங்கடிவாய் 59

வழலைப்பாம்பின் விஷக்குறி

வழலைக்கு வாய்வழுக்கும் கடிவாயில்
வடியும் ரத்தம் கருவழலையெனில்

கருவழலைப் பாம்பின் விஷக்குறி

அழலெனமேனி வெதும்பி வேர்வையிருக்
தங் கையுங்காலுஞ் சிவந்துகண் களிருண்டு 60
மார்பினை யடைத்துக் கொல்லும் இரத்த

இரத்த மண்டலியின் விஷக்குறி

மண்டலி யெனில் மயிர்க்கால் வழியில்
தாரைவிட்டொழுகுங் குருதி சீதளங்

சீதள மண்டலியின் விஷக்குறி

தருமண்டலிக் குடல்தான் குளிர்ந்து 61
ஒழுகிடும் வெயர்வையெனும் நீர் மூக்கனுக்

மூக்கன் பாம்பின் விஷக்குறி

குதாமூனுகு கடிதடமு மொக்து
பழுகிய வாயுங் கழுத்தும் இழுத்திட்டுன்
படரும் சூரனு நெரிந்துட லதிரும் 62

மங்க்கரவின் விஷக்குறி

சுற்றுமங்கரவாகில் இருகண்ணுஞ்
சுழன்றடிக்கடி மதிமயங்கிடுமே

மூனுக்கரவின் விஷக்குறி

பற்று மூனுக்கரவாகில் உடல்முற்றும்
பதறித் திருகி முறுக்கிடும் பூரம் 63

பூரவிஷக்குறி

நின்றூர்க்கு காகாக்கும் தேளுக்கு

தேளின் விஷக்குறி

நெறிகட்டிக் கடுத் தெரிந்திடும் வெயர்க்கும்
என்றார் நண்டுத்தேறுக்கால் கடித்திடில்

நண்டு வாய்க்காலியின் விஷக்குறி

எரிந்து கடுத்துக் குமிறிடும் வீங்கும் 64

செய்யான் விஷக்குறி

செய்யான்பற் பட்டகடிவாய் வீங்கியே
தேளிற் சதமடங்கோர் நாளுங்கடுக்கும்

செஞ்சோர்வு விஷக்குறி

பொய்யாச்செஞ் சோர்வுகடித்தால் உடல்முற்றும்
புள்ளிபோ லெங்குந்தடித்துத தெள்ளுசிவப்பாம் 65

கருஞ்சோர்வு விஷக்குறி

கறுத்திடுஞ் சோருவக்குத் தேகமுற்றும்
கறுத்துத் தடிப்படர்ந்திடும் திமிர்க்கும்

சிலந்தி விஷக்குறி

ஓறுத்திடுஞ் சிலந்தியெனில் கடிவாயில்
ஒருபொழு திருபொழு தெரிந்தழலும் 66

அறுபுள்ளி வண்டின் விஷக்குறி

வண்டுக்கடி யுடல்முழுதும் சிலநாளில்
வட்டமிட்டுத் தடித்திட்டுப் படர்ந்தரிக்கும்

செவ்வட்டையின் விஷக்குறி

கண்டுநேர்செவ் வட்டை கடித்தால் கடித்தவாய்
தடித்துச் சிவப்பேறித் திமிர்ந்திருக்கும் 67

இன்னமொரு கோடியுண்டாம் அவையெல்லாம்
எடுத்தறிந் தோதுதற் கெவர்தரமாம்

பாம்புகளின் ஆயுட்கணிதம்

பன்னகங்கள் வயதினையும் செருத்திடும்
பகையும் பிரிவினையும் பகருகிறேன் 68

பார்ப்பாருக் காயிரத்தெட்டு பாராளும்
பார்த்திபர்க் கெண்ணூறு மாத்திரமாம்
வார்த்தைநய வைசியருக்கு ஐந்நூறு
வகுத்தசூத் திரர்க்குமுந் நூறுவயதாம் 69

பாம்புகளின் பகைவர்

இருதலை மணியனசெந்நாய் மயிலன்னம்
எருதின் குளம்புமின்ன லிடிகிரி
கருமயிர்க் காடிபன்றி செம்போத்தும்
கருடன் முதலையாந்தை காக்கை கூகை 70

செயலுள்ள மாரிவெள்ளம் மறுமுதற்
செப்பிய சத்துருவுக்குத் தப்பிப்பிழைத்தால்

பாம்பின் வளர்ச்சியின் வரலாற்றுமுறை

வயதொரு நூற்றிருபது சாகாமல்
மண்மிசைவாழ்ந்திருக்கும் உண்மையிதுவே 71

மண்மீதில் நூற்றிருபது பருவமும்
வாழ்ந்த பிறகுடலந் தேய்ந்துகுறுகி
ஒண்மணிப் படஞ்சிறகாய்ப் பறக்குமப்போ
துயர்ந்தசிகையின்மணி யொன்றுதோன்றும் 72

அரச சர்ப்பத்தின் வரலாறு

தோற்றிய அந்தநாகம் புவிவிட்டுத்
தொடரும்வனத்திலும்விண் ணடர்வெற்பினும்
போற்றியே பணிகோடி சூழவே
புரவலன் போலிருந் தரசுசெய்யும் 73

மாநாகமென்றுபேராம் கருடர்க்கு
மாத்திரம் பயப்படும் நேர்த்தியதாய்த்
தானுன்கு பல்லின்விஷமும் இருகண்ணில்
தரிந்திடும் பார்த்தவுட னெரித்திடுமே 74

பாம்பின் ராசாளியென்றும் புகலுவர்
பருவமவை யொருநூற் றிருபதறத்

தாம்பெற்ற வாயுள்முழுதும் இருந்துபின்
சாலோக பதத்திற்கு மேலாமென்பார் 75

தூதனாரூடத்தாற் பலனறிதல்

தூதன் வரவும் வடிவும் அவன்வாயாற்
சொல்லுங்குறி தொடுங்குறி பல்லின்குறியும்
நீதியுடன் சொல்லுகிறேன் ராகுகால
நிலையிற் பதறிவந்து நின்றுசொல்லினும் 76

செய்யபூச் சூடிவரினும் கருந்துகில்
செய்யதுகிலைப்புனைந்து பையவரினும்
கையிற்றடி யூன்றிவரினும் கேடசம்
கத்தி கையிற்பிடித்துத் தந்திவரினும் 77

கண்ணில்நீர் சோரநிற்கினும் வாய்குழறிக்
கையைவிரித்துநின்று மெய்யுரைக்கினும்
விண்ணோக்கிப் பார்த்து நிற்கினும் தூணிலும்
விறகிலுஞ் சார்ந்திருந்து மெய்மைசொல்லினும் 78

மண்ணினைக்கால் கொண்டுகீறினும் தலையிற்கை
வைத்துவரினும் ஆடை சுற்றிவரினும்
எண்ணெய்தலைக் கிட்டுவரினும் பாரில்வீழ்ந்
தேங்கிப் புலம்பியழு தோங்கிநிற்கினும் 79
பாம்பின்பேர் முன்புசொல்லினும் பாம்பின்பல்
பட்டவன்பேர்பின்புசொல்லிநெட்டுயிர்க்கினும்

சோம்புடன்கொட் டாவிவிடினும் மார்பு சந்து
சொறியினுந்தன்மயிரைத் தூற்றிநிற்கினும் 80

வந்துயரிடத்து நிற்கினும் நோயாளி
வரினும் மொட்டைத்தலையன் வந்துநிற்கினும்
அந்தகன்கை கால்தறிபட்டோன் மூக்குக்கா
தறுபட்டோனொற்றைவிழிமறைபட்டோன் 81

இங்கிவர்கள்வந்து சொல்லினும் பூனைக்கண்ணன்
இயம்பிடினுங் காலக்கடிச் செயலிதுவே
பாங்குடன் தூதன்வந்த ஆரூடம்
பதினாறு திசைக்குநான் புகலுகிறேன் 82

தூதனுநடத்திக்கிறல் பாம்பையறிதல்

அருக்கனில் நல்லபாம்பு தேள் வழலை
அலைநீர்ப் பாம்பரணை எலிமண்டலி
இருக்குநற் சாரைப்பாம்பு மாநாகம்
எறும்புமயக் கரவுவண் டிகன்ற செய்யான் 83

பூரம் விரியன் சிலந்தி எனும்படி
பூர்வதிசை யாதிபதி னாறுவரைக்கும்
ஆரூடமிதுவாகும் தூதனிலை
அறிந்தின்னசெந்துவென்று தெரிந்துகொள்வாய்

தூதன் அவயவத்தைத் தொடுதலால் பாம்பையறிதல்

மூன்னம்வந்து நின்றதூதன் மூக்கையும்
மூகத்தையுந் தொடில்நற்பன் னகமென்னலாம்

பன்னுகரந் தன்னைத்தொட்டிடில் வழலை
பருத்தவிரியனாகும் உரத்தைத்தொட்டால் 85

சந்தரில் மண்டலியாம் இருமுழந்
தானும் புடையன் தன் கீழ்ச்சிலந்தி

தூதன்நிற்குந் திசையினால் பாம்பு கடித்தது யாரையென வறிதல்

வந்திந்திரன் யமன்வருணன் தனதனும்
வாழுந் திசையிற்சொன்னால் மன்னுமாண்பால்
ஈசனங்கி நிருதிதிக்கில் சொல்லிடில்
ஏந்திழையாரையென்று தேர்ந்துரைத்தார்
வாசமிகு காற்றுத்திசையில் இயம்பிடில்
வனத்துமிருகங்க ளினத்தையென்றார் 87

தூதன்சொல்லின் முதலெழுத்தால் திசையையும் கடித்தபல்லின் தொகையையுமறிதல்

கீட்டிசைவரு தூதன் அகரமுன்
கிளத்தி லொருபல்மன் திசைக்கிரண்டாம்
வாட்டமில் மேற்றிசையில் மூன்றுபல்
வடதிசை நாலுபல் வகிர்ந்தென்பார் 88

தென்திசைவருதூதன் இகரமுன்
செப்பி லொருபல்மேற் றிசைக்கிரண்டாம்
குன்றுதவடதிசையில் மூன்றுபல்
குணதிசை நாலுபல்லென் றுணர்தலாம் 89

மேற்றிசை வருதூதன் உகரமுன்
விளம்பிலொருபல் வடக் கிரண்டுபல்லாம்
தோற்றுங்கீழ்த் திசைமூன்றும் தென்றிசையிற்
சொல்லிப்பல் நாலென்று சொல்லலாமே 90

வடதிசை வருதூதன் எகரமுன்
வழுத்தி லொருபல்கிழக் கிரண்டு பல்லாம்
திடமிகும் யமன்திசையில் மூன்றுபல்
தேங்கும் வருணதிசை நான்குபல்லாம் 91

எண்டிசை வருதூதன் ஒகரமுன்
இயம்பிடி லொருபல்லு மில்லையெனலாம்
பண்டைவெள்ளையாடை புனைந்து வந்தொருவன்
பதறுமல் நின்றவிடஞ் சிதறிற்றென்றால் 92

தூதனின் சொல்லைக்கணித்துப் பல்லறிதல்

தூதன்சொன்ன சொல்லதனை எடுத்தெண்ணிச்
சூழ்ந்ததொரு மூன்றினி லீந்தசேடம்
ஓதுமொன்றேல் சாதல்திண்ணம் இரண்டெனில்
உயர்ந்து விஷந்தலைக் கொண்டுடன் மீளும் 93

சரியாயிருந்ததென்றால் விஷமில்லை
சரக்குறி யிலக்கண முரைக்கிறேன்கேள்.

சரக்குறிப்பரீட்சையால் பல்லறிதல்.

சொரி தரு பூரணத்தில் வந்தொருவன்
சூனிய திசையிற் போனனென்றால் 94

பற்பட்டோன் பட்டானென்பர் சூனியப்
பங்கில்வந்து பூரணத்தில் தங்கினுனென்றல்
முற்பட்டா லும்விஷத்தால் மெய்ம்மயங்கி
மூர்ச்சித்துக் கிடந்தாலும் தீர்க்காயுளாம் 95

மந்திரசித்தியுடைய விஷவைத்தியர் பாம்புகடித்த
பல்லெத்தனையெனப் பரீக்ஷிக்கும்முறை

இடக்கரத்து ரீங்காரத்தைக் கண்ணினுல்
எழுநிப்பார்த் திடநிறம் வெளுக்கிலொன்று
வடித்தபொன்னிறமாகில் இரண்டுபல்
வண்ணஞ்சிவக்கில்மூன்று பல்லென்னலாம் 96

கறுத்திடில் நாலுபல்லாம் முகந்திடில்

பாம்புக்கடிவாய் மணத்தினின்று பாம்பை
நிச்சயிக்கும் முறை

கடிமலர்த் தாழை வாசனைகாணில்
மறித்தது நல்லபாம்பு பாதிரிப்பூ
மணக்கில் வழலைப்புளி மணக்கில்விரியன் 97

மல்லிகைப்பூ மண்டலியாம் மிளகு சுக்கு
மணத்திடில் சிறுபாம்பென் றுணர்ந்திடலாம்
சொல்லியநற் பனம்பழத்தின் வாசனை
தொடங்கிடி லில்லையொரு விடந்தாலும் 98

பாம்புக்கடியின் விபரம்

முற்பக்கத் திரவினிலே புருடரைச்
சர்ப்பந் தொடர்ந்துவலந் தானிற்கடிக்கும்
பொற்புறுமடவியரை அரவிடப்
புறத்தினி லேகடித்தொறுத்திடுமே 99

நற்பகலி லாடவரை இடத்தினில்
நாரிய ரைவலத்தில் நாடிக்கடிக்கும்
பிற்பக்கத் திரவானை இடத்தினிற்
பெண்ணினை வலப்புறம் நண்ணும்பகலில் 100

கடித்திடும் ஆணைவலத்தில் பெண்களைக்
கடிக்குமிடப் புறத்தில் மடிப்பாக

பாம்பு விஷவேகக் குறிபேதம்.

பிடித்திடும் வேகக்குறி தனைச்சொல்வாம்
பெலத்தெழு வேகமு வகைப்படுமே 101

வாயுவின் வேகமெட்டு குளிர்தரு
வருணன் வேகந்தச வகையாகும்
தேயுவின் வேகம்பத்து மாத்திரை
தெரியின்மு வொன்பது வருணனுக்காங் 102

காற்றினுக் கைம்பதாகும் தேயுவுக்குக்
காட்டிய மாத்திரைதொண் ணூற்றெட்டாம்

சாற்றிய வாயுவின்முதல் வேகம்வந்து
சார்வுறில் மூர்ச்சித்து வோவரும்பும் 103

இரண்டுக்கு வெறுப்பு மூண்டாம் மூன்றிற் கண்
ணேறிச் செருகுநான்கி லெடுக்குஞ்சத்தி
திரண்டைந்திற் கோழையடைக்கும் ஆறெனில்
சிறக்கு மறிவழியும் விறைத்திடுமேழ் 104

எட்டாகி லுயிர்போக்கும் வருணனில்
இயலுமாதி வேகம் மயிர்க்குச்சாய
நெட்டுடல் முற்றச் சிவப்பாம் இரண்டுக்கு
நேயவுடல் கரிந்து வாயுமுலர்ந்து 105

வெதும்பிடு மூன்றாகில் உள்மயங்கும்
விளங்கிய நான்கெனி லுளங்கலங்கித்
ததும்பிடுங் கபமிகுக்கும் ஐந்தினில்
தலையை நடுக்குமெஞ் சத்தறிவழிக்கும் 106

ஆறாகிற் கண்விழித்து மேல்பார்க்கும்
அடுத்திடும் ஏழெனில் அங்கம்விறைக்கும்
கூறின இருநான்கில் அடக்கமாம்
குதித்திடுஞ்சுக்கில மொன்பதுக்கென்பார் 107

பத்தாகில் மரணமதாம் அங்கியின்
பகர்தரு முதல்வேகம் பார்வை சிந்தும்

சத்தான முகங்கறுக்கும் இரண்டெனில்
தடித்திட்டுச் சிறுநீருங் கடுத்திறங்கி 108

முகம்வெளுத் துடல்முழுதும் ரோமம்புல்
முளைத்த தெனத்தழைத்துக் கிளைத்துநிற்கும்
ஜகமதில் மூன்றாகில் வாய் குழறிச்
சிந்தை கலங்கிஉடல் நொந்துவீழும் 109

நாவினிற் குடலிரைந்து சோகமாய்
நாசியி னீர்வடிந்து தேசுமாறும்
மேலெழு மைந்தில்விழி உடல் முற்றும்
வெடுவெடுத் தாட்டமுற் றிடுமாறில் 110

பல்லுக்கடிப்புண்டாகும் விறைத்துடல்
பதைக்கும் மூக்கிரண்டிலும் குதிக்கும்புனல்
சொல்லுரை கெடுமேழில் எட்டினில்
சுவாசமெழும் விழிமேல்துன்னிநோக்கும் 111

ஒன்பதி லொடுங்குமுயிர் பத்தினில்
உடல்விட்டுப் பறந்திடு முயிர்வானில்
என்புள்ள தேகமதில் அடக்கமாய்
இருக்கு முயிர்நிலையை யியம்புகிறேன் 112

உயிர்நிலை விழிக்குறி.

விடத்தாகும் அடக்கமதில் இருவிழி
மேல்நோக்கில் உயிரது மேலாகுமே

மடங்கியே விழிகிழாய் விழித்திடில்
வாழ்வறு மூயிராது கிழாகும் 113

பக்கத்தில் விழியொதுங்கில் சீவனும்
பக்கத் திருக்குமென்றார் தக்கபெரியோர்
சக்கெதிர் விழித்திருக்கில் சீவனும்
சடத்தினில் இல்லையென்று இடத்திற் சொல்
[வாய் 114

உயிர்ப் பரீக்ஷைமுறை.

ஒடுங்கிடுஞ் சடமதனைப் பிரம்புகொண்
டோங்கி அடிக்கிலுடல் வீங்கிடினும்
சடந்தழ லெனவெதும்பிச் சிவக்கினும்
தண்ணீரில் போட்டிடத் தானமுங்கினும் 115

குடத்தினீர் மேற்சொரியில் உடல்முற்றும்
குளிர்ந்து மயிர்பொடித்து வளர்ந்திடினும்
பிடித்தகை விரலில் நெட்டி பறியினும்
பெலத்திழுத் திடமயிர் வலித்துறினும் 116

ஊன்றுங் குடோரியில் செவ்விரத்தம்
ஒழுகிடில் நவதாதி லொன்றுநடக்கில்
தோன்றிடும் ஆவியுள்ளே அடக்கமாம்
சூட்சி யிதுவேயதன் மாட்சியறியே. 117

சிரசிற்குடோரியிடுதல்

விருத்தம்

அடக்கமென் றறிந்த போதே யவர்தமை யுச்சிதீதி
குடத்தின்வா யோட மூத்திக் கொடும்புகை யடைத்த பின்னர்
வெடித்திடும் வேளைச்சாற்றை விட்டுமே லோட்டைவைத்துக்
கடுக்சன லெரிக்க மீண்டு கடிவிஷங் கடிவாய் காணும் 118

சிந்து

சிரசிற் குடோரியிட்டு வேளையின்
செழுஞ்சாற்றிற் சூதமொரு கழஞ்சுவிட்டு
விரிவா யோட்டைவைத்து அதன்மீது
வெய்யக்னிக் கனலிட்டுப் பையவெரிக்கில் 119

அடங்கிக் கிடந்தவுயிர் தோன்றிடும்
அனைவர்க்கும் அதிசய நினைவுறவே
விடங்கொளா வங்கடித்தே அடங்கிய
மிக்ககடி கைமூன்றே முக்காற்குள்ளே 120

காலனையோட்டித்துரத்தத் தந்திரங்
கற்றுணர்ந் தோர்கள்சொன்ன பெற்றியிதுவே
மேலான தந்திரந்தான் இன்னமொன்று
விஸ்தார மாகச்சொல்வேன் தத்தைமொழியே

பாம்புவிஷத்திற்கு மர்மஸ்தானச் சிகிச்சைமுறை

கேளாய் நீ ஆடவர்க்கு நாளமது
கிட்டுமாறு விரல்நீளந் திட்டமுடனே

வாளார்கண் மங்கையர்க்கு நாளமது
வளமிகும் எட்டங் குலநீளம் 122

செப்பினிற் றகட்டித்து வளர்கின்ற
செந்நெற் றுளின் பருமனென்று
ஒப்பென்று சிறுவிரலாம் இரண்டையும்
ஊமத்தைப் பூப்போலுருப்படுத்தி 123

அடக்கந் தனையறிந்து ஆடவர்க்
காறு விரலுடைய நாளமதைத்
திடமுடன் கோசமதிற் செலுத்தியே
தீதி லரைக்கழஞ்சு சூதம்விட்டு 124

நாளத்தின் மேற்புறத்தில் கரியுடன்
நல்ல கனலையிட்டு மெல்லவெரிக்க
வேளையரை நாழிகைக்குள் சூதந்தான்
விரைவா யுட்புகுந்து மருவியபின் 125

பணந்தா ளரவமது கடித்திட்டுப்
பறந்து பிராணன்விண்ணில் மறைந்திடமெய்
பிணமாய்க் கிடந்திடினும் உயிர்வந்து
பிறங்கிடு மேமிகு திறம்பெறவே 126

பெண்கட்கு மிப்படியே செய்திடிற்
பிழைப்பாரல் லாமலுயி ரிழப்பாரே

பாம்பு விஷம் யாவும் நீக்கச் சிறந்ததோரு தைலம் காய்ச்சும் விதம்.

பண்புறு தைலமொன்று புவியினில்
பட்ட பிணமதனைத் தொட்டெழுப்பச் 127

செய்யும் வகைகேளாய் ஒருபடி
செங்குன்றி மணித்தோலகற்றித்
துய்யபருப் பெடுத்துக்கொண்டே எருக்கிலை
சொல்லத்தகு விழுதியிலைச்சாற்றைச் 128

சரியாகக் கலந்ததிலே பத்துநாள்
தரித்திருந் தூறவைத் தெடுத்துக்கொண்டே
அரிகோர் §கொடிவேலி வேர்ப்பட்டை
அரைத்ததிற்கொம் மட்டிக்கா யளவதனை

டொன்றாகக் கலந்து *கஞ்சப் பாத்திரத்
தொருபுறத் தப்பியிரவி யொளிமுன்வைக்க
நன்றாய் விழுந்தைலம் அதிற்பாதி
நன்னுமிடைவாலுழுவை யின்னரிசிமாத்

தயிலந் தனிற்சேர்த்துக் கொண்டிதில்
தடுப்பதும் நாற்கழஞ்செடுத்துரசம்
இயலா யொருகழஞ்சு கெந்தகம்
இனிய வொருவராகனிடை சிறந்துக் 130

---

§கொடிவேலி—சித்திரமூலம்
*கஞ்சம்—வெண்கலம்

கட்டிநன் றுயரைத்துக் கழஞ்சொன்று
குருக்கொண்டுவிளை 1 வேலிப்பருத்திப்பஞ்சில்
ஊட்டியே யுலர்த்திக்கொண்டு நாளத்தை
ஒளிபெறு 2 கோசத்தி னுட்செலுத்தி 132

இருப்புச்சலாகையினால் பஞ்சினை
எடுத்தந்த நாளத்தி லடக்கியிட்டு
நெருப்பினை மேலிட்டுக் கொளுத்திட
நேயவுயிரும் வருங்காயத்திலே 133

கோசத்திற்புகையூட்டிப் பாம்புவிஷந்தீர்க்கும் முறை

சுடர்பெறு செந்தகரூப் காயமும்
3 சூதமும் எருக்கம்பால் சொரிந்தரைத்தே
அடையுடன் 4 வெண்துகிலில், தடவியே
யவிர்திரியாக்கியே யனற்கொளுத்தி 134

புகையைநற் கோசந்தனில் நன்றாகப்
புகட்டிடில் ஜீவன்வந்து புகுந்திடுமே
வகையாயக்கூடோரிதனை முன்னவர்
வகுத்ததை விரிக்காமற் றெருத்தேனே 135

---

1 வேலிப்பருத்தி—உத்தாமணி
2 கோசம்—ஆண்குறி
3 சூதம்—பாதரசம்
4 வெண்துகில்—வெள்ளைச்சீலை

விருத்தம்

நச்சர வாதியாக நண்ணுஞ்சிற் றெறும்பீருக
இச்சகத் தலைத்தீண்டியெரிவிஷந் தலைமேற்கொண்டால்
வைச்சமந் திரத்தினலு மருந்தினுங், தீராவிட்டா
லுச்சிதமாகத் தீர்க்கு முவணத்தியானஞ்சொல்வேனே

கருடத்தியானமந்திரம்

சிந்து

வேதியர்க் கனுகூலன் காசிபர்
வினதை பயந்தெடுத்த கனயோகன்
சாதுர்ய பக்ஷிராஜன் அருணர்க்குத்
தம்பி யெனவுதித்த கம்பீரன் 137

அஷ்டமா நாகங்களைப் பாதாள
மளவுந் துரத்திவெற்றி யதுபுனைந்தோன்
துஷ்டனை மிந்திரசித்து விட்டநாகக்
கட்டுவிட்டுத் தட்டழியவிட்டபெரியோன் 138

பலத்தில் சவுரியத்தில் ஒப்பிலாப்
பங்கய மாலையணிந்த சிங்கவேறன்னோன்
குலத்தினிற் பிரமகுலன் கீழ்க்கடல்
குடகடல் தென்கடல் வடகடலும் 139

கொடியினிற் சுற்றிவருவோன் பாற்கடல்
நடுவினிற் பள்ளிகொள்ளு நாரணர்க்குக்

கொடியும் ஊர்தியுமானோன் முன்னாளிற்
கோடியரக்கர்களைத் தேடிநுகர்ந்தோன் 140

கதியிற் சூரியகதியும் மனோகதி
காற்றின் கதியுமிகப் போற்றி செய்பவன்
திதிதரு மசுரர்களும் அதிதிதன்
சிறுவரும் பாற்கட லுறையமிர்தம் 141

கடைந்திட மந்தரத்தை வேரோடும்
பிடுங்கிமத் தாகநட்ட பெருமையினான்
மடந்தைதகத் துருவினிடந் தாய்தொண்டு
மாற்றிட வேணுமென்று மனந்துணிந்து 142

பறந்துவிண் ணுலகிற்சென்று இந்திரன்
பதியினிற் கருவூல மதிற்கதவைத்
திறந்துகொண் டுட்புகுந்து காவல்செய்
தேவ கணங்களையுஞ் சிந்தவெருட்டிப் 143

பொற்குடம் நிறைந்திருக்கும் அமிர்தத்தை
மெய்ப்புடனேயெடுத்து வெளியில்வைத்து
மற்கெதிர் புருகூதன் என்பவன்
உய்ப்பவரு முப்பத்து மூன்றுகோடி 144

தேவர்கின் னரர்முனிவர் கந்தருவர்
சித்த ரியக்கர்வளைந் துற்றவரைத்

தாவி நெடு மூக்கினாலும் சிறகாலும்
தடக்கையினாலுமிரு தாளினாலும் 145

மலைந்தவர் வெருண்டோட வென்றுநல்
வாகை புனைந்துமனத் தோகையுடன்
தலந்தனிற் சிறுதாயாம் கத்துருமுன்
தங்கக் குடத்தமிர்த மங்குவைத்துச் 146

சபதத்தை யறத்தீர்த்த சுத்தவீரன்
தானிந்தி ரற்கிளைய னானபுண்ணியன்
சௌபதப நியமம்பெற்றோன் கருடன்
சிறகிரண் டிட்பச்சை நிறமாக 147

விழிசிவப் பாகமேனி, முற்றிலும்
வெண்ணிறமாக விண்ணு மண்ணுமொன்றாய்க்
குழுமிய போல்நிமிர்ந்த உருவமும்
குடநிறையமிர் தமதைக் கரத்தில்வைத்து 148

பைந்நாக வணையுடையோன் கரத்தைந்து
படையுடையோன் கௌத்துபத் தொடையுடையோன்
பொன்னுடை ரத்நமகுடம் இடையிலும்
சென்னியிலுந்தரித்தோன் திருவரத்தான் 149

மாலேனைப் புயத்தில்வைத்து விழிகளில்
மருவுங் கருணைமிகப் பொழிதரவே

மேலானவிண்ணிற்பறந்து திசையெட்டும்
விளங்கவே யிருளென்னுங் களங்கமற 150

வருபவ ளுகநினைந்தே அன்புடன்
மனதிற் றியானஞ்செய்ய வல்லவிஷங்கள்
பரிதியைக் கண்டபனிபோல் நொடியினிற்
பறந்திடுமே வுயிர் சிறந்திடுமே 151

விருத்தம்

அதித்திடு பணிகளுன்கின் றேற்றமுமொடுக்கந்தானும்
விதித்திடும் வெவ்வே ருன சாதியின் விஷங்க டாமும்
பதித்திடுமெயிற்றுல்வந்தபலன்களுமுரைத்தோமிப்பால்
கதித்திடும்விஷத்திற்கெல்லாம்மருந்தினைக்கழறுவோமே

இரண்டாம் பகுதி

மருந்துவகை

நூல்நுதலியபொருள்

அத்தர்கென் மருதூரர் காரணர்
சித்தர் புரமெரித்த தேவதேவர்
மத்தமொடு கடுக்கைதும்பை கங்கைபிறை
வைத்த சடிலாதி கர்த்தரானோர் 153

கடுவமர் காலகண்டர் மான்மழுக்
கரத்தர் சிறுபுலியை யுரித்தெடுத்தோர்

நடுவினை புரத்துறைத்தோர் தேடிமுன்
நாரண ராரணர் தேடவரியார் 154

சேடனுக் காகவந்நாள் ஸ்வயம்புத்
திருவுரு வாகவந்த ஜகதீசர்
வேடனுக் கருள்புரிந்தோர் நாகைய
வேதியற் கன்றுபாச வாதம் புகன்றோர் 155

தரித்திரம் தீரமதிமான் எனும்வேந்தன்
தனக்குக் குறைவில்கிழி தனையளித்தோர்
கிரித்தனுப் படையுடையோர் குளிர்ந்திடு
கிரியா சின்றெடுத்த கிளிமொழியும் 156

மலர்மகள் கலைமகளும் அருந்ததி
வனதுர்க்கை யகலிகை வருசசியும்
தலமுண்ணு நெடுமாலும் கௌதமன்
சதுர்முகன் பரிதிசந் திரன்முருகன் 157

மாணிபத்தி ரன்கபிலன் எட்டுத்திக்கு
மாநாகந் திசைபாலர் வாழகத்தியர்
சேணிலத் தமரர்களும் முனிவரும்
தரிசித்துப் பூசைசெய்யக் கதிகொடுத்தோர்

மெய்யென நம்புமடியார் தங்களின்
வெய்ய வினையகற்றி விளங்கவைப்போர்

பொய்யென நினைந்தவர்பால் ஒருநாளும்
புகுதா தவர்வினை புகுதாதவர் 159

கலியுக வரதரென்று மொழிகின்ற
காரணத் தார்சதுராரணத்தார்
மலைமகளினைத்தமது நல்ல
வாமத்தில் வைந்துகந்த மகிமையினார் 160

பத்தர்பரி பாலராணோர் நாகலிங்கர்
பாதமல ரென்றலை மீதுவைத்து
சித்தர்கள் கொண்டாடும் நாகமுதற்
சிற்றெறும்பீறுதியாகச் சேர்ந்தவிஷங்கள் 161

தீர்த்திட நியங்களும் ஒத்தணங்கள்
செய்யு மருந்தும்விஷந் தீண்டினவுடன்
மாற்றிடத் தான்மருந்து மாத்திரை
மையுங்குழம் பாக்கிராணஞ் செய்யுமருந்தும்

சோற்றினிற்பாக் கிற்கொடுக்கும் மூலிகை
துவளை முறுக்குங்கடி வாய்ப்பூச்சும்
சேர்ந்திடும் வேதும்புகையும் வகையாகச்
செப்புகிறேன் யாரும் மெய்ப்புறவே 163

பாம்பின் விஷப்பரீக்ஷை வேர்

சோதனை பங்கப்பாளை வேரினைத்
துய்க்கக் கசக்கிவில்லை தொடர்விஷமே

போதவே யினித்தறென்றால் நல்லபாம்பு
புளிக்கில் வழலைதுவர்த் திடில்விரியன் 164

காழ்த்திடில் மயக்கரவாம் உவர்த்திடில்
கனத்த புடையன்மிள கெனில்மண்டலி
சேர்த்திய தாகவேதான் நாக்கினில்
நின்று கடுக்கில்நெடு மூக்கனாமே 165

நசிய மருந்துவகைகள்.

இப்படி யறிந்திடு நீ இசையவே
எல்லா விஷங்களுக்கு மேகநசியம்
செப்பவுங் கேளணங்கே வெற்றிலை
சிறிய மிளகுகறி யுப்புங்கசக்கி 166

கண்செவி மூக்கிற்பிழிய உடல்விட்டு
விண்புகுந் திட்டவுயிர் மீண்டுவருமே
பண்ணிகர் மொழியனமே முருக்கிலை
பகரு நெருக்கினிலை தும்பையிலையும் 167

பிழிந்திடு நாசி தனில் உடல்விட்டுக்
கழிந்த வுயிரும்வந்து கலந்திடுமே
குளிர்ந்திடுந் துளசியிலை தும்பையிலை
கொடிய மிளகுகறி யுப்புங்கசக்கி 168

நாசியிற் பிழிந்திடவே உயிர்விட்டுப்
பேசிடா தொழிந்திடும் பிணமெழுமே.

வீசிய முதல்வேகம் கண்சிவக்கில்
வெள்ளுள்ளி பெருமரப் பட்டைவசம்பு 169

நாறிப் பட்டை சிறுநீர் விட்டடித்து
பிழிந்திடு மூக்கில்விடு மொழிந்திடுமே
ஆறு விரண்டுமூன்று வேகத்திற்கு
அழலு மிளகுசுக்குக் கடுகிந்துப்பு 170

சாரணை வெற்றிலையும் ஒன்றாகத்
தட்டி நசியம்பண்ண விட்டோடுமே
காரண மாகவேகம் நாலைந்து
கழறுமொ ராறேழுக் கிடுநசியம் 171

புகலுவ னிலுப்பைக்கட்டி தன்னைப்
பொடித்துச் சிறுநீர்விட் டிடமூக்கில்
அகன்றிடு மந்தவேகம் எட்டெனும்
அதிவேகம் வந்தெழுந்து மதிமயங்கில் 172

கெந்தக முள்ளிவசம்பு மிளகுடன்
கெடியான தும்பையிலை துளசியிலை
தந்திடு முலைப்பாலும் நாசியில்
தட்டி நசியஞ்செய்யக் கெட்டோடுமே 173

சிறக்கும்பெரு மரப்பட்டை தைவேளை
சேர்த்துடன் எருக்கன்பால் வார்த்தரைத்து

கிறக்குக்குணி யிற்றடவி உலர்த்திச்சிறு
நீர்விட்டுரை சிபிலிடப் பார்விட்டோடுமே 174

நாசியிற் புகையூதிப் பாம்புவிஷந் தீர்க்கும் முறை.

கொடிக் கள்ளிப்பாலதனைத் துகிலினிற்
றுறையாமற்றேய்த்துலர்த்தி அரையும்வசம்பும்
அடித்திடும் பச்சைப்பாம்பு சுக்கும்
ஆனை புளியுமிள காயுமுப்பும் 175

இரித்திடுந் துணியில்வைத்து அதனைத்
தீயிற் கொழுத்திப்புகை நாசியிலிட்டால்
மரித்திடும் பிணமெனினும் கொடியினிஞ்
சுருத்துடனெழுந்திடுங் காலனில்லையே 176

ஒத்தணத்தால் விஷந்தீர்க்கும்முறை

ஒத்தணம் வேலிப்பருத்தி தைவேளை
§ஊருடை முதலியார் ¶பூனைவணங்கி
*மத்தம்வெற் றிலைபெருக்கும் பொன்னிறமாய்
வறுத்தொத்த விஷமெல்லா மாண்டுவிடுமே

---

§ஊருடைமுதலியார்—கறிமுருங்கை
¶ பூனைவணங்கி—குப்பைமேனி
* மத்தம்—ஊமத்தை

துவளையிட் மருந்துவகை

கீழ்க்காய் நெல்லி துளசி முருக்கிலை
இளத்து மொடுவடக்கி யிவைநான்கும்
தாழாம லிடித்துக்கொண்டு பிழிந்தந்தச்
சாற்றினையங்கமெங்குந்தேய்த்திடப்போம் 178

பேய்ச்சுரை பேய்க்குமட்டி அழிஞ்சிலின்
பேய்ப்பீர்க்குஞ் சிறுநீர் விட்டிடித்து
தேய்த்திடச் சடமுழுதும் விஷத்திருள்
செத்தயி ணைமெழுந் தத்தைமொழியே 179

வேறுநவகைத் துவளைமருந்து

மூழுக்கிட †யானைவணங்கி சமூலமும்
முன்னை யிடித்துப்பூசித் தன்னமுறக்க
சுறுக்கெனும் விஷங்களெல்லாம் கைவெடுத்துத்
தொழுது முழுதுமகன் றோடிடுமே 180

பாம்புவிஷம் நீக்க உள்ளுக்குத் தின்னும் தூள்மருந்து.

உள்ளுக்குத் தூள்மருந்து b கொல்லங்கோவை
ஊன்று கிழங்குமப்பைக் கிழங்குடனே

† யானைவணங்கி—பெருநெருஞ்சில்
b கொல்லன் கோவை=ஆகாயக்கருடன்-
-கிழங்கு

தெள்ளிய உதலைச்சுருளி வேரிவை
திருந்த விடித்ததுத்தெள்ளி வெருகடிதூள் 181
அள்ளியதை வெந்நீரில் கரைத்துக்
கொள்ள விஷங்களெல்லாங் குடிபோகுமே
வெள்ளைக்காக் கணமுழுதும் பொடிசெய்து
வெருகடி கொண்டிட விஷமகலும் 182

பூக்கில் ஆக்கிராணஞ் செய்யமருந்து

மூக்கிலாக் கிராணஞ்செய்யப் பச்சைப்பாம்பு
முழுது மிரண்டுமிள வாகவகிர்ந்து
தூக்கியே வெய்யலிலே உலர்ந்தபின்
சரியிடை மிளகிட்டுப் பொடியாக்கி 183
இடப்புறம் வலப்புறமும மாறுமல்
இரண்டும்வெவ் வேறாக விலக்கமிட்டு
படப்பொறி யரவப்பல்லு வலப்புறம்
பதியில் வலதுதூள் வலமூக்கிலும் 184
இடப்புறந் தன்னிற் றீண்டில் இடதுதூள்
இடது மூக்கிலுமாக வேற்றுடனே

வெற்றிலை பாக்குடன் சேர்த்துக் கொடுக்கும்
விஷநிவாரண மருந்து

விடுமுயிர் பிறந்திடுமே பாக்கில்
வீரவிக் கொடுக்கவட்டத் துத்திவேரும் 185

உதலைச்சுருளிவேர்—சாரணைவேர்

கொம்மட்டி மாதுளைவேர் சிற்றவரை
கொடிய மிளகாணை வேர்காலும்
அம்மியி லரைத்துலர்த்தி விஷத்துக்கு
அடைக்காயில் கூட்டி யருந்திடவே 186

தேரேறி வருகதிரோன் தனையெட்டித்
தீண்டுமிராகு விஷந் தீர்ந்திடுமே

சோற்றுடன் சேர்த்துக் கொடுக்கும்
விஷநிவாரண மருந்துமுறை

பேரான விஷத்திற் கெல்லாம் சோற்றுடன்
பிசைந்து கொடுக்கப்பழு பாகற்கிழங்கும் 187

சிந்தில்வேர் காட்டுக்கரணை அழுக்கிரா
சிறுகாஞ் சொறியெட்டி மருக்காரை
சாந்தமாங் கறிப்பாலை ஊமத்தை
சாரணைபேய்ப்பீர்க்குச் செப்புநெருஞ்சில் 188

வெற்றிலை காஞுவாழை முட்புறண்டி
விளங்குமவுரிபதி ஞறுவசையும்
பற்றற விடித்தெடுத்து வடிகட்டிப்
பழவரிசியிலரைப் படியெடுத்துத் 189

தூளரைப் படியெடுத்துக் கலந்துபின்
சோறு சமைத்துக்கொள்ள மீறிவிஷம்

ஊழ்வினைப் படிவரினும் ஓடிடும்
உண்மையீதென்றுசொன்னா ருண்மைபெறவே 190

எள்ளிற்சேர்த்துக்கொடுக்கும் விஷநிவாரண மருந்துமுறை

எள்ளினிற் றிருகுகள்ளிப் பால்கறந்
திரவி படவுலர்த்தி யரவுபல்லால்
மெள்ளவே கடித்ததென்றால் ஒருபிடி
எள்ளைக் கொடுக்கவிஷ மிறங்கிடுமே 191

பழந்துணி தனிற்றேற்றான் பழத்தினைப்
பதமாத் தடவியதை நிழலுலர்த்திப்
புழையுறு மெயிற்றரவங் கடித்திடில்
புனலிற்கரைத்துக்கொள்ளப் பொற்கொடியே

எடுத்திடுங் கோழைக்கட்டும் நெஞ்சடைப்பும்
இல்லைச் சிரத்துவிஷ மிறங்கிடுமே

கண்ணிற்கலிக்கமிட்டு விஷந்தீர்க்கும் மருந்துமுறை

மடுத்திரு கண்ணிலிடக் கலிக்கம்
வயங்கித்தெரியும்படி யியம்புகிறேன் 193

கந்த மகிழ்விதையோ டிரதமும்
கசந்திடு பெருங்காயம் வசம்பதுவும்

உந்துபேய்ப் பீர்க்கன்சாற்றில் அரைத்ததைச்
*சுந்தரி வயிற்றினிற் றுளைத்துவைத்துச் 194

சந்துவாய் பொருந்தக்கட்டி முகட்டினில்
தட்டாமற் றூக்கிவைத் தெட்டாந்தினம்
தந்திர மாயெடுத்துக் குழிக்கல்லில்
தழுவவரைத் துருட்டி நிழலுலர்த்தி 195

விடந்தலைக்கொண்டுநின்றே பற்கிட்டி
விடிலுமிழ்நீரி லுரைத் திடல் மீளும்

வேறேருவகைக் கலிக்க, மருந்துமுறை

மடந்தையேயின்னமுங்கேள் பெருங்காயம்
மருவுகெந்தமுடன் பொரிகாரம் 196

†தாரமுமாம் பிசினும் பேய்ப்பீர்க்கின்
சாற்றிலரைத்துக் கயிறுசேர்த்துலர்த்திக்
கூரியவிஷத்திற்கெல்லாம் கண்களிற்
கொஞ்சமுரைத்திட அவையஞ்சியகலும் 197

விஷத்துக்கு உள்ளுக்குக்கொடுக்குந்தைலங்
காய்ச்சுமுறை

வஞ்சியே தைலமொன்று செய்யும்வகை
மதித்துக்கேள் பேய்ப்பீர்க்கின்விதைப்பருப்பு

*சுந்தரி—மூஞ்சூறு. †தாரம்—அரிதாரம்

மிஞ்சாமலொருபடியில் ஐந்நூறு
வெற்றிலையின்சாறது விட்டரைத்துக் 198
களிம்புறும் வெண்கலத்தில் அப்பியே
§கதிரவன் முன்பேழு‡கன்னலிருக்க
வழிந்திடுந் தைலமதைப் பத்திரமாய்
வைத்திருந் தாவின்பல் தைத்தவுடன் 199

சூதமும் கந்தகமும் இருபங்கு
துங்கத் தைலநாலு பங்குகூட்டி
தாதுயர் தைலமதைப் பணவிடை
தடவிநா வற்கொழுந்திற் றாவிஷம்போம் 200

சிரசிற் குடோரியிட்டு விஷம் நீக்குந் தைலங் காய்ச்சும் விதி

வயங்குங் குடோரியிடுந் தைலத்தை
வாய்ப்பாகச் சொல்லுகிறேன் கேட்பாய்பெண்ணே
பயன்பெறு மழிஞ்சிவிதைப் பருபப்பு
படியொன்று மடக்கொத்தான் கொடியினிலை

உத்தம தாளியிலை இரண்டையும்
ஒருமிக்கச் சாறுபிழிந் தரைத்துக்
கற்றாவின் பாலுங் கூட்டிப் பிசைந்தொரு
கலத்தினி லப்பியதைக் கதிர்முன்வைக்க 202

§கதிரவன்—சூரியன் ‡கன்னல்—நாள்

வடிக்கிவேர் தைலமங்கே சிரசின்
மத்தியிலும் பிடரியிலுங் குத்திக்கிளறி
மடிக்கிலேஞ் சடமெனிலும் தைலத்தை
மயலறத் தேய்த்திட வுயிர்வருமே 203

வாய் மூக்கு முதலிய இடங்களில் விட்டு விஷமிறக்குந் தைலங்காய்ச்சும் விதி

வாய்மூக்கில் விடத்தைலம் எட்டிவிதை
வழுவி லழிஞ்சில்விதை கழுதையெலும்பு
ஓய்வரு குரலோரி முதுகெலும்
புமுத லெலும்பு மைந்துவகையும் 204

பானையிற் புதைதயிலம் இறக்கியே
பரணி தனிலடைத்துப் பத்திரஞ்செய்து
மானிடர் தமையரவம் கடித்தேறி
மண்டைகொண் டால்விஷம் வாய்மூக்கினில்

தயிலஞ் சற்றேயெதுப்பி வசம்பினில்
தானினைத் தொருதுணி தனைவிடுக்கில்
செயலற்றுக் கிடந்தபிணம் உயிர்வந்து
திடமா யெழுந்திருக்கும் படமாதே 206

முறுக்குச் சர்ப்ப விஷத்துக்கு மருந்து வகை

முழுக்கா வுதீண்டி உடல்முற்றும்
முறுக்கி நடுக்கிக்குளிர் பிறக்குமெனில்

உறைத்திடு மிளகுபொடி பாகற்சாற்
றுடன்கலந் தருந்திட விஷமகலும் 207
நிலப்பனங் கிழங்கரைத்துக் கொடுத்தாலும்
நெடிய முறுக்கரவின் விஷநீங்கும்

மயக்குச் சர்ப்பவிஷத்துக்கு மருந்துவகை

தலைப்படு மயக்கரவங் கடித்திடில்
தங்குகறிப் பாலையின்வேர் நுங்கவிஷம்போம்
பயப்படு மிளகுபொடி காய்ந்தவோட்டில்
படுத்தி முகத்திற் புகை கொடுப்பதுமாம்

விரியன் பாம்பின் உற்பத்தி வரலாறு

தேவிபுகழ்

செயப்படு விரியனெனும் அரவது
செனித்திடு மிடத்தினைச் செப்புகிறேன் 209
நாரணன் சோதரியாள் திரிலோக
நாயகி பருப்பத ராஜன்மகள்
காரணி பஞ்சபாணி திரிபுரை
கருணி தருணி வீரி கங்காளி 210
ஜகத்தி லெண்ணுன் கறமும் வளர்த்தென்றும்
மகத்துவம் பெற்றிருக்கு மகமாயை

இகத்தி லடியவர்க்குச் செல்வமும்
பரத்திற் கதியுமருள் பகவதிநீள் 211

குஞ்சர முகமுடையான் றன்னையும்
குஹனையும் பெற்றெடுத்த கொற்றவைநண்
பஞ்சிறு மெல்லியதாய்ச் சிவந்திடு
செஞ்சிலம் பலம்பிய சீறடியாள் 212

மருத வனத்துறையும் ஈசர்தம்
வாமத்தி லிருந்திடு மகராசி
சுருதியின் முடிவில் நின்ற திருமிகு
சுந்தரி நிரந்தரி துரந்தரியாள் 213

அழகிய நாயகியாள் திருவரை
ஆடையிற் றோய்ந்திடு *மரத்தமதில்
விழைவுட னேபிறந்து வளர்ந்திட்டு
விரிய னெனப்பெயர்கொண் டெரிதவழும்

காண்முற்றுந் திரிகின்ற உரத்தின்
கடிக்கு நசியமது கழறுகிறேன்

விரியன்பாம்பு விஷத்திற்குப் பலவகையான
நசியம் முதலிய மருந்துகள்

தேன்முட்டி னிலைநசியம் விட்டுடன்
திருப்ப வரைத்துப்பூசத் தீரும்விஷம் 215

---

*அரத்தம்—இரத்தம்

உள்ளுக்குப் பெருவாகைப் பட்டைச்சா
†றுழக்குநெய் யாழாக்கோ டுறைமிளகு
விள்ளுமோர் காற்பலமும் பொடிசெய்து
விரவிக் கொடுக்கவிஷ மீண்டிடுமே 216

கசந்திடும் பாகலிலைச் சாறுரு
காற்படியிற் காற்பல மிளகரைத்துப்
பிசைந்துடன் கரைத்துட்கொள்ள உடலது
பசந்த விரியன் விஷம் பறந்திடுமே 217

ஆப்பினை யறைந்ததுபோல் விரியன்பல்
அழுத்தக் கடித்துவிஷ மதிகரித்தால்
வெப்பெண்ணெய் ‡ஆழாக்குக் கொடுத்திட
மீண்டும் கடிவாயின் வீக்கமும்போம் 218

மழுதின் வலியாலே விரியன்
உரத்துக் கடித்துவிஷஞ் சிரத்திற்கொண்டால்
வீழியின் பழமரைத்துப் பசுவின்
வெண்ணெய் தனிலருந்த மீண்டிடுமே 219

சத்திரந் தைத்ததுபோல் விரியன்
தாண்டிக் கடித்துவிஷ மூண்டுகொண்டால்

---

†உழக்கு—காற்படி
‡ஆழாக்கு—அரைக்காற்படி

*சித்திர மூலியின்வேர் பொடிசெய்து
†தேனுவின் பாலிற்கொள்ளத் தீர்ந்திடுமே 220

விரியன்விஷத்திற்கு உள்ளுக்குக் கொடுக்கும் மிகச் சிறந்த உப்பு மருந்து.

கறியுப்புப் ‡பதக்களந்து காட்டுக்
கருணைக் கிழங்குகொடி வேலிவேரும்
பொறியுற்ற கோழியவரை வேரிவை
போதவே யாறுபலம் நிறுத்தெடுத்துக் 221

குறைவற இடித்துக்கொண்டு உப்பினிற்
கூட்டிக் கலந்திரண்டு கூறுசெய்தே
சிறுத்திடும் பானையிலே ஒருபங்கைத்
திடமுட னேபரப்பிச் செகுத்திட்டதோர் 222

மறமிகும் பெருவிரியன் றனைவைத்து
மற்றொரு கூறுமதின் மேற்பரப்பித்
திட்முடன் வாய்மூடிச் சீலைசெய்து
திண்ணமாய் மண்டலம் மண்ணுள்வைத்தே

எடுத்துவிரி யன்கடிக்கு நீரினில்
இதமுடன் கரைத்துள்ளுக் கீந்திடவே
அடுத்திடும் விஷநடுங்கிப் பறந்திடும்
அன்ன நடையேகேளா யின்னமொன்று 224

---

*சித்திரமூலி—கொடிவேலி †தேனு—பசு
‡பதக்கு—இரண்டுகுறுணிகொண்ட ஒரு அளவு

விரியன் விஷத்தால் வீங்கிடில் பூச்சுமருந்துவகை

வீங்கிடும் பூச்சுமருந்து தக்காளி
வேர் நீலி நாயுருவி வேருங்கூட்டிப்
பாங்குட னரைததுக்கொண்டு வீக்கத்திற்
படிந்திடப் பூசவே வடிந்திடுமே 225

எருமையின் சாணிதனை எருக்கமபால்
இளகவிட் டரைத்துக்கடி வாயிற்பூசக்
கருநிற நீர்விரியன் பற்பட்ட
கடிவாயின் வீக்கமது வடிவாகுமே 226

தேகத்தின் மேற்பூசப் பெருங்காயம்
சிறுசின்னி வசம்பிவை சிறுநீரில்
பாகமா யரைத்துடம்பிற் பூசிடப்
பறக்கும் விரியன்முறுக் கரவுக்குமாம் 227

தக்காளி யிரண்டுவகையும் காடிவிட்டுச்
சமூலந் துவைத்துச்சாறு தனைப்பிழிந்து
மிக்கான விரியன்விஷம் மெய்கலந்து
மீறிற் றுவளேயிட மாறிடுமே 228

ஆறுவகைவிரியன் விஷத்துக்கும் துவளை மருந்து

ஆடு தின்னாப் பாளையிலை தன்னை
அடைவுடன் *வச்சிரப் பாலிலிட்டுக்

*வச்சிரப்பால்—சதுரக்கள்ளிப்பால்

கூடிய மூன்றுநாள் உலர்த்திக்
கூறும் கிரியன்வகை யாறுவகைக்கும் 229

நலம்பெறச் சூரணஞ்செய்து வேப்பெண்ணெய்
§நாழியி லரைப்படி தான்நன்றாயிட்டுக்
கலந்துவெந் திறக்கிக்கொண்டு தைலத்தைக்
கையி லெடுத்துடனே மெய்யிற்றடவப் 230

பறந்திடுங் கொடியவிஷம் விக்கத்திற்

பாம்புக்கடி விஷத்தினால் வீங்கி அழற்றினால்
அது தணிக்கக்கட்டும் மருந்து

பற்றுமழ லைதணியக் கட்டுமருந்து
சிறந்திடுங் கொவ்வையிலை *தாளிப்பூ
திருந்தவே காடிச்சோ றுடனரைத்து 231

†சேதாவி நெய்யுங்கூட்டி விக்கத்தில்
திடமாகக் கட்டிடப்போம் மடமானே

பாம்புவிஷத்தினால் வீங்கிக்கடுத்து எரிந்தால்
அதனைத்தணிக்கப் பூச்சுமருந்து

மீதாகக் கடுத்தெரிந்தால் பூச்சொன்று
விளம்புகிறேன் பச்சை முருக்கழிஞ்சில் 232

---

§நாழி—ஒருபடி *தாளிப்பூ—நறுந்தாளி
†சேதாவின்நெய்—சிவப்புப்பசுவின்நெய்

வாலையிலை யகத்தி துழாய் இருதும்பை
பருத்தி யிருபாசு விருகோவ்வை
சீனிநற் சூலி §கொடுப்பை உப்பிலி
நிகழ்த்திய யிவையெல்லாந் துவைத்தெடுத்துக்

காடியிற் கரைத்தடுப்பிற் காய்வித்துக்
கனலற வாற்றிக்கடி வாயிலிட

தேள், விரியன், மண்டலி, செய்யான், சோர்வு
ஆகிய சகலவிஷங்களுந் தீர்க்கமருந்து

நாடியே விஷம்தீரும் தேள்விரியன்
நல்லமண்ட லிசெய்யா னல்ல சோர்வுக்கும்

†ஆகாயத் தூளிற் புனல் விட்டிளக
அரைத்துக் கொதிக்கவைத்துக் கடிவாயில்
வாகாகப் பூசிடவே பூசினகை
வாங்குமுன் குளிர்ந்திடும் வீங்கிற்கடிவாய் 235

மேற்கூறியவற்றின் விஷம்மீறி வீங்கினாற்
பூச்சுமருந்து

ஏலஞ்சந் தனமுலைப்பால் பசுவின்பால்
இளநீர் பசலைநற் றாழை விழுது

---

§கொடுப்பை—பொன்னாங்காணி
†ஆகாயத்தூள்—ஒட்டறை

மூலமா மிருவேலி இவையெல்லாம்
முயன்றரைத் தெடுத்துக்கடி வாயிற்பூச 236

வீக்கமுங் கடுப்பெரிப்பும் தணிந்திடும்
மெல்லிய தானதல்ல மயிர்கருக்கிக்
கோக்குல வெண்ணெய்கூட்டி, வீக்கத்திற்
குழைத்துத் தடவக்குடி போய்விடுமே 237

மேற்கூறிய விஷங்கட்கு வேதுபிடிக்கும் முறை

ஆவியொன் றியம்புகிறேன் பாகலிலை
அழற்றுப் பிரண்டையிரண்டினையுமொன்றாய்த்
தாவற வேயிடித்துக் காடிவிட்டுத்
தணலுற வேகவைத்துக் கீழிறக்கிச் 238

சூரவம் விரியன் செய்யான் மண்டலி
சுறுக்கிடுங் தேள்சிலந்தி நண்டுத்தெறுக்கால்
மேலெயிறு படக்கடித்துக் கடித்தவாய்
வீங்கிக் கடுத்தெரியில் வேததனைப் 239

பிடித்திடக் கடிவாயின் கடுப்பும்
பெருத்திடும் வீக்கமுஞ் சிறுத்திடுமே

துவளை மருந்து

இடித்திடுங் கொவ்வையிலைச் சாறுடல்
எங்கும் துவளையிட மங்கும்விஷம் 240

மேற்கூறிய பலவிஷங்களுக்கும் குடோரிமருந்து

நக்கிடும் குடோரிவித்தை தனைச்சொல்வாம்
*சுந்தரி பிடித்ததன் றோல்களைந்து
மூக்கிடும் உள்ளி வசம்பு ஒன்றாக
நக்காமல் நல்லெண்ணெயி னன்றாயிட்டு 241

வெந்திடக் காய்ச்சி யிறக்கித் தைலத்தை
வெய்ய விஷமேறி மீறிச்செத்தால்
அந்தமா மவன்சிரத்திற் கீறியே
விந்தை யுடனேதேய்க்கில் மீளுமுயிர் 242

விரியன்கடிவிஷத்தினால் புண்ணுண்டாகுமாயின் நீக்கமருந்து

விரியன் கடித்தவாயிற் கொப்புளித்து
விரிந்துபுண் ணாகிலுள்ளி வசம்புசுக்குச்
சரியிடை நிறுத்துக்கொண்டு சுந்தரிச்
சதையு மெடுத்துச்சமன் கூட்டிக்காய்ச்சும் 243

சரியநல் லெண்ணெய்தனைப் புண்ணினிற்
காசிடை யந்திசந்தி பூசிடவே
உரமலி புண்களெல்லாம் ஆறிடும்
உண்மையீ தென்றுசொன்னா ருயர்சித்தர்தாம்

---

*சுந்தரி—மூஞ்சூறு

குருவிஷநிவாரணச் சஞ்சீவித்தைலம்

சஞ்சீவி யானதைலம் இன்னமொன்று
சாற்றுகிறேன் *பச்சைப் பாம்பதனை
அஞ்சிடா தடித்தரைத்து வேப்பெண்ணெய்
அரைப்படி தனிலரைத்துக் கரைத்துக்கொண்டு
வாட்டமில் லாதெரித்தே புண்ணிலிட
மாறிடு மென்றுசொன்னார் மடமானே

ஷைவிஷத்துக்கு வேறுமோர்தைலம்

நாட்டினிற் கோழியின்கால் §இம்பூரா
நவின்றிடும் கீழ்க்காய் நெல்லியின்வேர் 246
மஞ்சள்மிள கிந்துப்பும் சமனிடை
மானேநல் லெண்ணெயிலேவாகாயிட்டு
எஞ்சவே கொதிக்கவைத்து முதிராமல்
இறக்கியே புண்ணிலிடப் பறக்குமென்றார் 247

விஷத்தினால் புண்ணுண்டாகுமாயின் அதனைத் தீர்க்கக்கட்டும் மருந்து

கட்டிடுகோழியீரல் நாளேட்டுக்
கடிவாயிற் புண்ணாறி யிடுமானே

சீதமண்டலிப்பாம்பின் விஷகடிக்குச் சுலபமருந்து

துட்டனெனுஞ் சீதமண்டலி கடித்திட்டால்
சொல்லுகிறேன் கேள்வெகு நல்லமருந்து 248

---

§இம்பூரா—சாயவேர் *கண்கொத்திப்பாம்பு

முற்றிய தேங்காயை அருந்திடச்
சற்றும்நில் லாமல்விஷந் தானகலுமே
*முத்திருக்கஞ் செவியதனைக் காடியில்
முதிரவேவேகவைத் தாவிகொடுக்க 249
விரைவுட னகன்றிடுமே ....

சோறிமண்டலிப்பாம்பு விஷந்தீர்க்கும் மருந்து

.... சொறியுறு
விஷமிகு மண்டலி கடித்ததென்றால்
நரைமிகு நன்னாரிவேர் பாலுடன்
நாள்மூன் றருந்திடத் தாழ்வாகுமே 250

வீங்குமண்டலிப்பாம்பின் விஷத்துக்குப்
பூச்சுமருந்து

வீங்குமண் டலிகடித்தே கடிவாய்
வீங்கி லமுக்கிரா வேர்சூரைவேர்
தாங்கிய புங்கன்வேரும் இண்டைவேர்
தக்காளி வேரிலுப்பை வேருங்கூட்டி 251
‡அமுரிவிட் டரைத்தெடுத்துப் பூசிட
அலர்ந்திடும் வீக்கம தொழிந்திடுமே

---

*முத்திருக்கஞ்செவி—காட்டுச்சாமந்தி
‡அமுரி—சிறுநீர்

திமிர்மண்டலிப் பாம்புவிஷத்துக்கு மருந்து

திமிர்மண்ட லிகடித்தே திமிர்த்திடில்
தீரும்பொன் மூசுட்டையின் வேரருந்தின் 252

நால்வகைவழலைப்பாம்பு விஷங்களுக்கும் மருந்து

வழலையோர் நான்குவகைக்கும் பாலினில்
வாரக் கிழங்கருந்திற் றீரும்விஷம்

சாணகழுக்கன் கொம்பேறுமூக்கன் ஆகியஇருவகைப் பாம்பு விஷத்துக்கும் மருந்து

பழகுசா ணகமூக்கன் விடத்திற்கும்
படர்ந்திடுங் கொம்பேறு மூக்கனுக்கும் 253

வண்ணிபிலை தனைத்துவைத்துக் காடிவிட்டு
வடித்தெடுத் தரைப்படி கொடுத்ததனைச்
சென்னிமுத லுடல்முற்றுந் தேய்த்திடத்
தீரும்விஷமென் றுசொன்னார்செய்யபெரியோர்

பிரண்டையின் வேரரைத்துப் புன்னைக்காயப்
பிரமாணம் வெந்நீரிற் பருகிடினும்
திரும்பிடும் மூக்கன் விஷம் ... .

புடையன்பாம்பு விஷத்துக்கு மருந்து

... . புடையனில
செப்பிடு நால்வகைச் செந்துக்கள்தாம் 255

துள்ளிய பற்கள்படக் கடித்தவாய்
தூங்கின வீங்கியே வெயர்வரும்பில்
ஒள்ளிய காட்டுக்கானைக் கிழங்கும்
உயர்ந்திடும் *புகையூரல் கொட்டைக்கரந்தை

இருப்பையின் பழக்கோதும் அழரிவிட்
டிளக வரைத்துப்பூச் சிடிலேகும்
வரியுறுங் கட்டைப்புடையன் கடித்திடில்
வசம்புடனெருக்கம்பால் புற்றின்சோறும் 257

புகைத்திட காசியிலே விஷமது
திகைத்தோடு மென்றுமோரு கணத்தினிலே
பகைத்திடு நெடுங்கழுத்துப் புடையன்பல்
பதிந்திடக் கடித்திடிற் ‡படமடக்கிக் 258

கிழங்கைப்பா லிலருந்த விஷமிட்டுக்
கிட்டாம லோடிவிடுங் கிட்டமுடனே
வழங்கிய புகையூரல் நீலியிலை
வடிசுண்ணம் இலுப்பைக்கட்டி கொடிக்கள்ளிப்பால்

விட்டரைத்துப் பூசிடினே வீக்கம்
விலகிடு மினியொன்றை விளம்பிடக்கேள்
ஒட்டுறும்விழியின்பூ அரைத்தண்ண
ஒருநாலு புடையனு மொழிந்திடுமே 260

---

*புகையூரல்—ஒட்டறை ‡தாழை

நாய், குரங்கு, பூனை, குதிரை, நரி, சிறுபுலி, பூதலே, வேங்கை, ஆகிய எட்டு வகை விஷங்களுக்கும் மருந்து

நாய்வா னரம்பூனை துரகம்
நரிசிறு புலிகரா பெருவேங்கை
தீயனிவ் வெட்டுவகையும் கடித்திடில்
தேடிகீலி வேராவின் பாலிலரைத்தே 261
மூன்றுநா ளருந்திடவே ஓடிடும்

சோர்வுகளின் விஷகடிக்கு மருந்து

மூர்க்க மிருக்கசோர்வு கடித்ததென்றால்
ஊன்றிய பனைவெல்லத்தில் எருக்கம்பால்
ஓரேழு துளிவிட்டு உண்ணவெழுநாள்
அகன்றிடுங் கருஞ்சோர்வு கடித்திட்டு
அங்கத்திற் கறுப்புற்றுத் தடித்ததென்றால்
சுகந்தநன் னாரிவேரும் புங்கின்வேர்
சொல்லுஞ் சிறியாநங்கை வேரும்பாலில் 263
கலந்துண்ண மூன்றுதினம் நீங்கிவிடும்

செய்யான் விஷ கடிக்கு மருந்து

கனற்றும் பெருஞ்செய்யான் கடித்ததென்றால்
நலம்பெறு கோவையிலை வெற்றிலை
நல்ல பருத்தி†கொஞ்சிவல் லுத்தாமணி 264

---

†கொஞ்சி—கிஞ்ஞாச்செடி

களங்காயில் முடக்கொத்தான் இலையாறும்
கசக்கிச்சாறுபிழிந்து காய்ச்சித்தடவக்
குளிர்ந்திடும் கடுப்பெரிப்புத் தப்பலம்
கொட்டுவாயிலுமிழ்ந்தாலும் விட்டுவிடுமே 265

செய்யான் விஷத்துக்குப் பூச்சுமருந்து

நாதுவளை நாவலிண்டை வேரரைத்துச்
சுற்றிக்கடி வாய்தனிற் பற்றத்தடவத்
தீதுற்ற செய்யான்விஷம் உடன்விட்டுச்
சென்றிடுமென்றுரைத்தார் கெண்டைவிழியே

அறுபுள்ளிவண்டுக்கடி விஷத்திற்கு மருந்து

ஆறுபுள்ளி வண்டுகடித்தே கடுத்தெரிப்
பாகிற்பழுங் காடியிற் பாகலிலையை
மாறிட வேகவைத்த ஆவியை
வாகாக்கடி வாயிற்காட்ட வாங்கும்விஷம் 267

சரக்கொன்றை வேரரைத்துப் பாலினில்
சாப்பிடக் கொடுவிஷந் தானகலுமே

காட்டட்டைக்கடிவிஷந் தீர்க்கமருந்து

நெருக்குற்ற வனத்தினட்டை கடித்திடில்
நேரும் புணமுருங்கை 1 சூரியின்வேர் 268

1 சூரி=நத்தைச்சூரி

ஆசிலா வேப்பம்பட்டைத் தைலத்தில்
அரைத்துக் கொடுக்கவிஷ மகன்றிடுமே

தேளின் கடிவிஷத்துக்குப் பலவகையான மருந்து

வீசிய தேளினுக்குக் கோழியெச்சம்
வெற்றிலை யிற்கொடுக்க விஷமகலும் 269

சொல்லங்கோவைக் கிழங்கரைத்துக்கொடுத்திடக்
கொடிதான †கருந்தேளின் விஷமறுமே
நல்லவெள் ளெருக்கம்பால் சீலையில்
நனைத்து மயிலிறகு தனிற் சுற்றியே 270

கோழியெச்ச மேற்றடவி வைத்துலர்த்திக்
கொடியபன் னிருதேளுங் கொட்டிற்றென்னிலவ்
வேளையிற் றீக்கொளுத்திக் கொட்டுவாயில்
மெல்லப் புகைக்கவிஷ மில்லைக்கடுப்பும் 271

நண்டு வாய்க்காலி விஷநிவாரண மருந்து

நட்டுவாய்க் காலிகொட்டிக் கடுத்திடில்
நன்று ‡வழுதுணங்கா யொன்றுவெதுப்பிக்
கட்டிட விஷத்தணியும் எட்டிவிதை
கழற்சிக்காய்ப் பிரமாண மிழைத்துப்பூசக் 272

---

†கருந்தேள்—திருநீலகண்டத்தேள்
‡வழுதுணங்காய்—ஒருவகைக் கத்தரிக்காய்

கடுப்புட னெரிப்போசேரும் பழப்புளி
காடி தனிற்கரைத்துச் சாடியிற்பெய்தே
அடுப்பினிற் கொதிக்கவைத்துக் கொட்டுவாயில்
ஆவி பிடிக்கவிஷம் போய்விடுமே 273

†ஆகாசத் தூளையெருமைச் சாணிப்பால்விட்
டரைத்துக் கொதிக்கவைத் திட்டுவாயில்
நீகாசி னளவெடுத்துப் பூசிடில்
நின்றிடுங் கடுப்பெரிப் பகன்றிடுமே 274

பதினெட்டுவகை எலிகளின் பெயர்கள்

எலிக்குலம் பதினெண்வகை அவைகளை
இயம்புகி றேனெவர்க்கு நயம்பெறவே
வலிக்குங்கத் தரிமணியன் செம்மூக்கன்
வள்ளி குறட்டைகருங் காற்றலையன் 275

விடவெலி செந்தலைமுத்தி செவ்வெலி
வீங்கெலி உலர்ப்பெலி தூங்கெலியும்
புடையெலி இரைப்பெலியும் சேங்கண்ணன்
புள்ளி காடன்குறுங் காலெலியும் 276

நச்செலி *யீரொன்பதும் கடித்திட்டு
நாள்நாளு மேவிஷந் தானேறினால்

---

†ஆகாசத்தூள்—ஒட்டடை

எலிகளின் பதினெட்டுவகையும் பின்வரு மாறு காண்க:—

கத்தரிப்பணியன், செம்முக்கன், வாளி, குறட்டை, கருங்காலன், தலையன், விடவெலி, செற்றலைமுட்டி, செவ்வெலி, வீங்கெலி, தூங்கெலி உலைப்பெலி, புடையெலி இரைப்பெலி, செங்கண்ணன், புள்ளக்காடன், குறுங்காலன், நச்செலி ஆகியவைகளாம்.

வேறுவைத்தியசாஸ்திரங்களிற்கூறும் பெயர் வித்தியாச விபரம்

1 லாலஜம், 2 சபளம், 3 புண்டரம், 4 ஹரிதம், 5சிகுரம், 6 அசிதம், 7கஷாயதந்தம், 8 குநகம், 9 கோகிலம், 10 கபிலம், 11 கிருஷ்ணம், 12அருணம்,13சபலம், 14சுவேதம்,15 கபோதம், 16உந்துரு, 17பலிணி,18ரசாலம் என முறையே பதினெட்டுவகையாகவும் அழைக்கப்படுகின்றன.

எலிக்கடிவிஷத்திற்குப் பரிகார வேதுமுறை

பச்சை *பாதளையின்மணி ஒருபது
பாலி லரைத் தருந்தி மூலகலுமே 277

ஊமத்தம் விறகுகொணர்ந் திடித்ததை
ஒரு பாண்டத்தினில் வைத்தொருகிடங்கில்

---

* ஆதளை = எலியாமணக்கு

ரெமித்ததனைப் பிருத்திக் கழுத்தின்மேழ்
நிடுகுழிவாய் மறையமூடியிட்டுப் 278

பக்கத்தில் காளவழிபோல் பறித்ததப்
பாண்டத்தின் கீழனல் மூண்டிடச்செய்து
தொக்கினிற் புதைத்திடவே எலிவிஷம்
கக்கிவியர்வுடனே கழிந்திடுமே 279

சகல சிலந்தி விஷங்களுக்கும் மருந்துவகை

சிலந்தி *யோரிருபதினில் அழல்வாய்ச்
சிலந்திக்குச் சுண்ணாம்பும் பழப்புளியும்
கலந்ததக் கடிவாயில் தேய்த்திடக்
கடுப்பு மெரிப்புமுடன் விடுத்திடுமே 280

சம்ஸ்க்ருத வைத்திய நூல்களிற் கூறப்படும் மதபேதம்.

சிலந்திப் பூச்சியின் வேறுபாடுகள்:- சிலந்திப் பூச்சி இருபத்தெட்டு வகைப்படும். அவைகளின் விபரம்:-

வாதச்சிலந்தி எழு, பித்தச்சிலந்தி எழு, சிலேஷ்மச்சிலந்தி எழு, சங்கீரணச்சிலந்தி எழு, ஆகியவற்றில் வாதச்சிலந்திகளில் பீதச்சிலந்தி, குமுதச்சிலந்தி, ஆமலச்சிலந்தி, ரத்தச்சிலந்தி, சித்திரச்சிலந்தி, சந்தானிகச்சிலந்தி, மேஜகச்சிலந்தி ஆகியவைகளும் பித்தச்

சிலந்திகளில் கபிலா, அக்கினிமுகம், பீதம், பத்மம், மூத்திரம், சுவேதம், கறுப்புச் சிலந்தி, ஆகியவைகளும் சிலேஷ்மச்சிலந்திகளில் பாண்டு, ரத்தப்பாண்டு, வண்டு பிங்கலம், திரிமண்டலம், தூர்க்கந்தம், சித்திரமண்டலச் சிலந்தி ஆகியவைகளும் சங்கீரணச்சிலந்திகளில் காகச் சிலந்தி, அக்கினிபதச்சிலந்தி, வாஜவர்ணச்சிலந்தி, வைதேகிச்சிலந்தி, ஜாலமாலினிச்சிலந்தி, மாலாகுணச் சிலந்தி, சுவர்ச்சச்சிலந்தி என இருபத்தெட்டுச் சிலந்திகளும் பிரத்தியேகச்சிலந்தி எனவொன்றும் ஆகச் சம்ஸ்க்ருத வைத்திய நூல்களில் மிகவும் விரிவாகவும் தமிழ் நூற்களோடு சிறிது மாறுபட்டும் சில இடங்களில் ஒற்றுமையாகவும் இச்சிலந்திகள் கடிக்கும் ஸ்தானங்களின் விபரங்களும் அதிகமாகக் கூறப்படுகின்றன.

ஆவிரை தாளிபசலை காடிவிட்
டவித்திட்டுங் கடிவாயில் குவித்துக்கட்ட
நாவுரை செயவேண்டுமோ எரிப்பெங்கும்
நாடிடு மேபறந் தோடிடுமே 281

இருபது வகைக்குமென்றால் மருந்தொன்
றேல வுரைப்பேன்பிராய் வேர்சீலியின்வேர்
சுரபியின் பாலிற்கொடுக்க முப்பொழுதில்
துறந்திடு முயிர்வந்து சிறந்திடுமே 282

வண்டுக்கடி விஷத்துக்கு மருந்து.

வண்டுகடி வெகுவிதமாம் அதற்கெல்லாம்
§வண்டுகொல்லி மரப்பட்டை மைபோலரை
கொண்டு புன்னைக் காயளவு நாளெட்டுக் [த்துக்
கொடுத்திட வண்டுகடி விடுந்தோடுமே 283

உயர்திகழ் பங்கம்பாளை வேரினைக்
காசிடை யனுதினங் கடித்தருந்தப்
பயந்திடும் வண்டுகடி a சங்கின்
பருத்திடு வேரின் மேற்றோல் முருக்கினெற்றும்
அளவெட்டு நாளருந்தி உப்புப்புளி
அகற்றிடில் வண்டுகடி திகைத்திடுமே

குரங்குக்கடி விஷத்துக்கு மருந்து.

குழுக்கொண்டு மரங்களிலே குதித்திடுங்
குரங்கு கடிக்கூச்சுக்கு bகொஞ்சியின்வேர் 285

சீரினி லரைத்துடம்பிற் பூசிட
நீங்கிடும் c வீழியி னிலைச்சாற்றிற்
கூறிய மிளகுபொடி ஒருபலம்
குழப்பிவெளியில் வைத்துக்கொழு நுரையைப்

---

§ வண்டுகொல்லி—தேவதாரம்
a சங்கு—இயங்கு. b கொஞ்சி—கிஞ்ஞா
c வீழி—நீர்முள்ளி.

புண்ணினிற் பூசிடவே யுலர்ந்திடும்
பூத்தி டுங்கொஞ்சி விளாத்தியிலை
கண்ணினிற்கண் டதைக்கொணர்ந்து வறுத்
[தொத்திக்
கட்டவிஷக தட்டுக்கெட்டு விட்டுவிடுமே 287

d பச்சோந்திக்கடி விஷத்துக்கு மருந்து.

பச்சோந்தி கடித்திடினே e தழுதாழை
பண்ணை பாட்டையிலை நண்ணுஞ் சிறுநீர்
பிச்சமாய் விட்டரைத்துக் கடிவாயில்
மெள்ளப்பூசியாத்தியிலைத் தெள்ளுதேபாடியை

வெண்ணெய்தனி விட்டுக்காய்ச்சி நாசியினில்
விடுத்துவிக் கத்திறநட விடக்குணமாம்

நாய் விஷத்துக்கு மருந்து

மண்ணின்மிசை ஞாளிகடித்தால் ஆசது
மருந்துநன் ஞரிவேர் கரந்தையிலை 289

உப்பெள்ளுப் புகையூரல் சிவந்தநா
யுருவியில் வகையாறு மொன்றுபடுத்திச்
செப்பமா யரைத்ததனைப் பூசியே
உப்புச்சுண்டை யிலைதுவைத்துப பின்பதனை

---

d பச்சோந்தி—பச்சிலை ஓணான்
e தழுதாழை—வாதமடக்கி

வருந்தோத்திக் கட்டாயின் பற்பட்ட
வாயிற் கடுப்புநதணீர் தோயும்விஷம்

காட்டுத் தவளைக்கடி விஷத்துக்கு மருந்து

கருத்திடுங் காட்டுத்தவளை கடித்திடல்
கருகிச் சொறியெழும்பிற் கறியின்பொடி. 291

கழஞ்சிரண் டகத்திப்பிலைச் சாறெரு
காற்படி தனிவிட்டுக் கரைத்தருந்திப்
பழம்புளைத் தூளுழுப்பும் வேலியின்
பருத்தியி னிலைச்சாற்றி லரைத்திடப்போம்

அரணைநக்கினால் அன்றிக் கடித்தால் அவ்விஷந் தீர்க்குமருந்து

நக்கிடு மெனிலரணை உடல்முற்றும்
நடுங்கிவெண் ணுரைதள்ளி நாக்குத்தடிக்கில்
சுக்கொடு வசம்பெடுத்துச் சுட்டிப்பின்
சூரணைத் தருந்தினுஞ் சாரணைவேர் 293

துவைத்ததன் சாறுடம்பிற் பூசினுந்
தொலையுங் குருந்துபனந் தோல்வேரும்
கலைத்தருந் திடவரணை விஷமெல்லாம்
முடிந்தொடுங் கிடும்நாக்குத் தடித்ததுபோம்

$விஷம்யாவுக்கும் சிறந்ததோர் குழம்பு மருந்து

விடமெனப் பட்டவைக்கெல்லாம் குழம்பொன்று
விளம்புகி றேன்வெள்ளைப் பாஷாணம்
நடமிடு மிரதங்கெந்தி மனோசிலை
நாலும்பெருங் காயமுடன் கூறுந்துருசு 295

வேம்பவிதை யுடனேழுஞ் சரிநிறை
நேர்வாளஞ் சுத்திசெய் திரட்டிகூட்டி
நம்புமெருக்கம் பால்விட்டே அம்மியில்
நயந்தேழு நாழிகை நசுக்கிப்பின்னும் 296

வேப்பெண்ணெய் விட்டரைத்து வழித்தொரு
மேதிக்கொம் பின்சிமிழில் போதவரைத்து

$ வெள்ளைப் பாஷாணம், ரசம், நெல்லிக்காய்க் கெந்தகம், மனோசிலை, பெருங்காயம், துருசு, வேம்பு விதை ஆகிய ஏழும் சரியிடை ஒன்றாகச் சேர்த்துச் சுத்திசெய்த நேர்வாளம் இரண்டுபங்கு கூட்டி, எருக்கம்பால் விட்டு ஏழுநாழிகை அரைத்துப் பின், வேப்பெண்ணெய் விட்டரைத்து, எருமைக்கொம்பு டப்பியில் பக்குவமாக வைத்துக்கொண்டு, சகல விஷங்களுக்கும் பயற்றளவு குழம்பு வெற்றிலையில் வைத்துக் கொடுக்க நிவர்த்தியாகும். பத்தியம், உப்புச்சேர்க்காது மோருஞ்சோறும் சாப்பிடவும். அல்லது, பச்சரிசி பருப்பு, பால் மூன்றுஞ் சேர்த்து வேகவைத்துச் சாப்பிடவும். [அநுபவமுறை]

பாம்புமுத லானவற்றின் பற்பலேக்
பலபல விடத்துக்கும் பயற்றளவு 297

வெற்றிலை தனித்தொகொடுக்க உடன்விஷம்
மீண்டிடும் பற்கிட்டில் வெந்நீரில்
மத்திக் குழம்பதனைக் காற்றுவரும்
வாயிலொழுக் கிடவிஷ நோயகலுமே 298

பத்தியம் மோருஞ்சோறும் கொடுப்பது

பாம்பு பிடிப்பதற்கு ரக்ஷாபந்தனம்

......பாம்புகடி யாமலதைப் பற்றுதற்குச்
சித்தர்கள் செய்யுமுறை கைக்கு
சேர்த்திட மூலிவகை சாற்றுகிறேன் 299

படர்ந்திடும் பங்கம்பாளை நீலிகழிப்
பாலைகழற்சி சித்திர மூலியின்வேர்
கடித்திடு மாதுளைவேர் சிந்தில்வேர்
கள்ளிவேர் கர்ப்பூர வள்ளியின்வேர் 300

சிறுசிய நங்கையின்வேர் புளியாரை
செப்பிடும் பேய்சொட்டியின் சிறுவேரும்
குறுசியபேய்ப் பீர்க்கின்வேர் குன்றிவேர்
கோடாசிலை சிவமூலி கூடியதோர் 301

வேர்வகை பதினாறும் கொண்டுவந்து
விருத்தமாய்ச் சுற்றிவலக் காத்திலிட்டுப்

யார்தனி லெட்டிப்பணியும் இழுத்திடப்
பழுதைபோற் கிடந்திடும் பதையாமல் 302

பாம்பு கடியாது வலிமைகுன்றச் செய்து
வாய்கட்டவேர் முதலியன எடுக்கும்விதி

மிதித்திடிற் கடியாமல் வாய்கட்டு
வேரது சொல்லுகிறேன் பாரதனில்
உதித்திடுங் கதிர்வாரந் தனிற்கதிர்
உதயத்திற் சென்‡றிலஞ்சி யதனைச்சுற்றி 303

வடதிசை வேரினிலே காப்புக்கட்டி
மாலைப் பொழுதில்முக்கால் வலஞ்செய்து
உடன்பலி யிட்டுத்தறித்தே குளிசத்தின்
உள்ளடைத் திட்டுக்கடி கொள்ளவுரகம் 304

மிதிக்கினும் கடிக்கினும்வாய் திறவாமல்
மெலிந்திடுங் கண்டவுட னுலைந்திடுமே

வேறொரு விதிமுறை

மதிக்குநற் பச்சைப்பாம்பு பச்சோந்தி
வாலிரண் டிந்துணித்து மாறாமல் 305

செப்பினிற் றகடடித்துப் பொதிந்துடன்
சிறுவிரற் கணிமோதி ரஞ்சேர்த்து

‡ இலஞ்சி—மகிழமரம்

தும்பிக்கை விரலிலிட்டுப் பணிகளை
நாடிப் பிடிக்கில்வாய் மூடிடுமே 306

விஷம் ஏற்றவும் இறக்கவும் யந்திராக்ஷாபந்தனவிதி

[1]வெய்யவன் தலையாவும் பரிசிக்கும்
வேளையிற் செல்வலரி சீருடம்படவே
செய்யநூற் காப்புக்கட்டிக் கலைந்திட்டுச்
செம்பிற் பொறிக்[2]அஹி விடும்பொழுது 307

மேற்றிசை வேர்பிடுங்கி வெள்ளியின்
மின்னுருத்தகட் டிற்பொறித்து துன்னவிருத்திக்
கூற்றெனு முரகம்பல்லால் வகிர்ந்திடின்
குடதிசை வேரடைந்து குளிசமதை 308

இரமுதற் கடிவாயின் வரைக்குகீ
தேய்த்திறக் கெடவிஷந்தீருமே
மருவர வக்கடிவாய் முதற்சிர
மட்டும் வடக்குவே ரிட்டகுளிசம் 309

மேனோக்கித் தேய்த்திடவே தீர்ந்திட்ட
விஷமிறங்கித் தலைகொண்டு மேவிடுமே

விஷவைத்தியர்களுக்கு இந்நூலாசிரியின்
மங்கல வாழ்த்து

நாகமுதலாகப் பலவிஷம்
மானிடர் தமைப்பற்றி வதைபுரிந்தால் 310

---

[1]வெய்யவன்—இராகுகாலம் [2]அஹி—ராகு

மந்திர தந்திரத்தால் தியானத்தால்
மணியினால் மருந்தினால் தணிவுசெய்யும்
அந்தமில் புகழ்படைத்த மருத்துவர்
அனைவரும் திரைவளர் கனைகடல்சூழ் 311

தரைமிசை யொருநூறு பருவமும்
சரிவர வேயிருந்து தான்வாழ்ந்து
திருமகள் விளக்கம்பெற்றுப் பதினாறு
சிறுவரைப் பெற்றுமுத்தி பெறுவர்களே

ஆசிரியவிருத்தம்

வேதியன் முதனாற்சாதி
விடவராக் கடியுண்டோருங்
கோதிய மந்திரத்தான்
மருந்தினா லுறுநோய்தீர்த்தோர்
சாதியின் மிக்கவேதத்
தலைவராய்ச் சிறந்துபின்னர்
போதில்வாழ் பிரம ராகிப்
புகழுவீற் றிருப்பர் தாமே

சித்தர் ஆரூட விஷவைத்தியம்
முற்றிற்று.

சித்தர் ஆரூட

விஷய அட்டவணை.

இலக்கம்	விஷயம்	பக்கம்
35.	கருவழலைப் பாம்பின் விஷக்குறி	16
36.	இரத்த மண்டலியின் விஷக்குறி	16
37.	சீதள மண்டலியின் விஷக்குறி	16
38.	மூக்கன் பாம்பின் விஷக்குறி	16
39.	மயக்காவின் விஷக்குறி	16
40.	முறுக்காவின் விஷக்குறி	16
41.	பூரவிஷக்குறி	17
42	தேளின் விஷக்குறி	17
43.	நண்டுவாய்க்காலியின் விஷக்குறி	17
44.	செய்யான் விஷக்குறி	17
45.	செஞ்சோர்வு விஷக்குறி	17
46.	கருஞ் சோர்வு விஷக்குறி	17
47.	சிலந்திப்பூச்சி விஷக்குறி	17
48.	அறுபுள்ளிவண்டின் விஷக்குறி	18
49.	செவ்வட்டையின் விஷக்குறி	19
50.	பாம்புகளின் ஆயுட்கணிதம்	18
51.	பாம்புகளின் பகைவர்	18
52.	பாம்பின்வளர்ச்சியின் வரலாற்றுமுறை	19
53.	அரசசர்ப்பத்தின் வரலாறு	19
54.	தூதனுருடத்தாற் பலனறிதல்	20
55.	தூதனுருடத்திக்கினாற் பாம்பையறிதல்	21
56.	தூதன் தன் அவயவத்தைத் தொடுதலால் பாம்பையறிதல்	21

இலக்கம்	விஷயம்	பக்கம்
110.	குரூரவிஷசிவாரணைச் சஞ்சீவித்தைலம்	58
111.	மேற்படி விஷத்துக்கு வேறுமொரு தைலம்	58
112.	விஷத்தினால் புண்ணுண்டாகுமாயின் அதனைத் தீர்க்கக்கட்டும் மருந்து	58
113.	சேமண்டலிப் பாம்பின் விஷகடிக்குச் கல்பமருந்து	58
114.	சொறிமண்டலிப்பாம்பு விஷந்தீர்க்கும் மருந்து	59
115.	விக்குமண்டலிப்பாம்பின் விஷத்துக்குப் பூச்சுமருந்து	59
116.	தியிர்மண்டலிப்பாம்பு விஷத்துக்கு மருந்து	60
117.	நால்வகை வழலைப்பாம்பு விஷங்களுக்கும் மருந்து	60
118.	சாணகமூக்கன் கொம்பேறு மூக்கன் ஆகிய இரு வகைப்பாம்புவிஷத்துக்கும் மருந்து	60
119.	புடையன்பாம்பு விஷத்துக்கு மருந்து	60
120.	நாய், குரங்கு, பூனை, குதிரை, நரி, சிறுபுலி முதல், வேங்கை, ஆகிய எட்டுவகை விஷங்களுக்கும் மருந்து	62
121.	சோர்வுகளின் விஷகடிக்கு மருந்து	62

ஜாதகக் குறிப்பு.

................கால

நவக்கிரஹ நிலை.

Pt. நடராஜ ஜோதிஷர்

"ஜோதிஷ சாஸ்திர நிலயம்"

No.

பெயர் ....

விலாசம் ....

ஸ்வஸ்தி ஸ்ரீ

ஹ ஸ்ரீ உ (

கிழமை நேரத்தில்

புத்திர உதயாதி

டி விநாடி உதயலக்கினம் சா

ரலக்கினம் நக்ஷத்திரம்

ம் பாதம் யோகம் கரண

ஜனனகாலம் .... மஹாதசை.

கிரஹம்	இடம்	நிலை.	
சூர்யன்			
சந்திரன்			
செவ்வாய்			
புதன்			
வியாழன்			
வெள்ளி			
சனி			
ராஹு			
கேது			